**கமெண்ட் கந்தர்...**

எந்த நேரத்தில இந்த தேர்தல் அறிவிப்பை வெளியிட்டாங்களோ தெரியேல்ல..!



Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 182 சுபகிருது வருடம், மாசி மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை (03.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 10, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50





புதிய அமைச்சர்களை நியமிக்கக்கோரி பட்டியலொன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடமிருந்து ஜனாதிபதி ரணிலுக்கு சென்றுள்ளதாம். ஆனால், அந்தப் பட்டியலில் உள்ள பலருக்கு அமைச்சுப் பதவிகளை கொடுப்பதில் தயக்கம் காட்டுகிறாராம் ரணில். மக்கள் மத்தியில் அடங்கியுள்ள எதிர்ப்பு மீண்டும் தலைதூக்கலாம் என்ற அச்சமே அதற்கு காரணமாம்.



## வெங்காயம், கிழங்கு விலைக் குறைப்பு

கொழும்பு, புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை குறைந்துள்ளது.

ஒரு கிலோ வெங்காயத்தின் மொத்த விலை தற்போது 95 ரூபாவாக உள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் ஒரு கிலோ பெரிய வெங் காயத்தின் மொத்த விலை 130 ரூபாவாக இருந் தது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலையும் குறைந்துள்ளது.

கடந்த வாரத்தில் சுமார் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக் கிழங்கின் விலை தற்போது 130 ரூபாவாக குறைந்துள்ளது.

# தேர்தலுக்கு நிதியில்லை!

## இவ்வருடத்திற்குள் எப்போது நடத்தினாலும் நிதி வழங்காதிருக்க அரச மேல்மட்டத்தில் தீர்மானம்

தேர்தலை நடத்துவதற்கான மாற்றுத் திகதியை தீர்மானிக்கும் விசேட கலந்துரையாடலொன்று இன்று இடம்பெறவுள்ள நிலையில், இன்று அறிவிக்கப்படும் புதிய தேர்தல் திகதியில் தேர்தலை நடத்த உரிய நிதியை வழங்காதிருக்கவும் அரச மேல்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 09ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஆணைக்குழுவினால் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இன்று தேர்தலுக்கான மாற்றுத் திகதியொன்றை அறிவிப்பதாக...

02 பக்கம்

## ஐ.ஜி.பி. பதவிக்கு மும்முனைப் போட்டி



வெற்றிடமாகவுள்ள பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மும்முனைப் போட்டி ஆரம்பித்துள்ளதாக தெரிய வருகிறது.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்க மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோருக்கிடையில் இந்த மும்முனைப் போட்டி நிலவுகிறது.

02 பக்கம்

## ஐ.எம்.எவ். கடன் வசதியை பெறுவதற்கு ஒத்துழைப்பு

### சீனா மீண்டும் உறுதியளிப்பு



சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை கோரியுள்ள கடன் வசதிக்காக, சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக சீனா மீண்டும் உறுதியளித்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சின் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அதன் ஊடகப் பேச்சாளர் மாவோ நின்ங் இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த ஒத்துழைப்பு தொடர்பான ஆவணங்களை சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி ஏற்கனவே இலங்கை...

02 பக்கம்

## பாடசாலை மாணவி மீது துஷ்பிரயோகம்

### ஆசிரியர் கைது

(கே.சுபானி)

எஹலியகொட பிரதேச பாடசாலை யொன்றில் 10 வயதுடைய மாணவியொரு வரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய ஆசிரியரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக் கமைய விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், சந்தேக நபரான ஆசிரியரை (46 வயது) கைதுசெய்துள்ளதாக எஹலியகொட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர்...

02 பக்கம்

## புதிய தேர்தல் திகதி இன்று அறிவிப்பு

தேர்தல் ஆணைக்குழுவின் நிர்வாகத்துக்கு அப்பாற்பட்ட சில காரணங்களினால், திட்ட மிட்டபடி இம்மாதம் 09ஆம் திகதி உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறாது என்று ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், தேர்தலை நடத்துவதற்கான மாற்றுத் திகதியை தீர்மானிக்கும் விசேட கலந்துரையாடலொன்று இன்று இடம்பெறவுள்ளது.

இம்மாதம் 09ஆம் திகதி நடத்த திட்டமிடப் பட்டிருந்த...

02 பக்கம்

## நிதி தெரிவுக்குழுத் தலைவர் பதவிக்கு மீண்டும் ஹர்ஷ

### ஐக்கிய மக்கள் சக்தி பிரேரிப்பு



வெற்றிடமாகியுள்ள பாராளுமன்றத்தின் அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயரை மீண்டும் பிரேரித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தெரிவுக்குழுவின் கடந்த 01ஆம் திகதி கூட்டத்தின்போது, குறித்த பிரேரணை கட்சித் தலைவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின்...

02 பக்கம்

## உடல் எடையால் பாதிப்படைவோர் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு

### சுகாதார அமைச்சு தகவல்

(நா.தினுஷா)

நாட்டில் அதிக உடல் எடையினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் எதிர்காலத்தில் தொற்றா நோய் களினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான எச்சரிக்கை நிலை காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

இறுதியாக, கடந்த 2021ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், இலங்கையில் 30சதவீதமான ஆண்களும், 48சதவீதமான பெண்களும் அதிக உடல் எடை யினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச் சின் தொற்றா நோய்ப் பிரிவின் சமூக மருத் துவ நிபுணர் சாந்தி குணவர்தன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில்...

02 பக்கம்

## தேர்தலை நடத்தாவிடின் சர்வதேசத்திடம் முறையீடு

### லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. திட்டவட்டம்

(நா.தினுஷா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு உள்நாட்டு நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நீதிமன்றத்தின் உதவியை நாட வேண்டி ஏற்படும் என்றும் அதற்கு வழிவகுக் காமல் தேர்தலை நடத்த விரைவான...

02 பக்கம்

## வேலைநிறுத்தம் நடந்த தினம் கடமைகளுக்கு வந்தோர் யார்?

### அறிக்கை கோருகிறார் அமைச்சர் காஞ்சன

(நா.தினுஷா)

நாட்டில் நேற்று முன்தினம் முன்னெடுக் கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையின்போது, பணிக்கு வந்த ஊழியர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதி காரிகளிடம் மின்சக்தி மற்றும் வலுசக்தி...

02 பக்கம்

## பூகம்பத்தால் பாதிப்பு வரலாம்!

### விசேட எச்சரிக்கை

இந்தியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டால் அதன் தாக்கம் இலங்கையை பாதிக்கலாம் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத விப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி...

02 பக்கம்

## வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்களுக்கு நிவாரணம்

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆராய்வு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழி யர்களுக்கு சம்பளம் வழங்கும் முறைமையொன்று தயாரிக்கப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

இந்த ஊழியர்கள் மீது அரசு கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்த அரச மற்றும் அரை அரச ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 7,000 ஆகும்.

## நலன்புரி தரவுக் கணக்கெடுப்பு

### மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவு

நலன்புரி நன்மைகள் வழங்கும் திட்டத்திற்கு தகுதியானவர்களை கண்டறியும் வகையில், தரவுகளை ஆராய்வதற்கான தரவு திரட்டல் நடவடிக்கை தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்தப் பணிகள் மார்ச் 31ஆம் திகதி யுடன் நிறைவடைவதாக நலன் நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

02 பக்கம்

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இன்று ஆரம்பம்

(கே.சுபானி)



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இன்று (03) மற்றும் நாளை (04) நடைபெறவுள்ளது.

வருடாந்த திருவிழாவுக்காக புனித அந்தோனியார் ஆலயம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது.

நெடுந்தீவு பங்குத்தந்தை வசந்தன் தலைமையிலான பங்குத்தந்தைகள், இலங்கை...

02 பக்கம்

# பொலன்னறுவை விவசாயிகள் ஜனாதிபதி ரணிலுக்குப் பாராட்டு

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை உரிய நேரத்தில் வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொலன்னறுவை விவசாயிகள் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

பொலன்னறுவை மின்னேரிய பிரதேசத்தில் நேற்று (02) நடைபெற்ற வைபவமொன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த பொலன்னறுவை மாவட்ட விவசாய அமைப்பின் தலைவர் ஆனந்த ராஜபக்ஷ உள்ளிட்ட விவசாயிகள் ஜனாதிபதிக்கு தமது சங்கத்தின் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.



விவசாயிகளுக்காக ஆற்றிய பணியைப் பாராட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு "ரன் வீ கரல" (தங்க நெற்கதிர்) என்ற பெயரிலான பரிசும் வழங்கப்பட்டது.

# பசுமை வலுசக்தி பொருளாதாரத்திற்கு விரைவாக மாற வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்து

பசுமை வலுசக்தி பொருளாதாரம் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரத்தை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்தக்கூடிய அடித்தளத்தை உருவாக்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மின்னேரிய, வோல்டா ஒட்டோ டெக் இன்ஜினியரிங் நிறுவனத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று (02) கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வாக மின்சார மோட்டார்சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்கான தேவை ஏற்பட்டுள்ள இக்காலத்தில், ஒன்றிணைக்கப்படும் டிராக்டர்கள், மின்சார மோட்டார்சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளை இன்றுமுதல் கொள்வனவு செய்வதற்கு வோல்டா ஒட்டோ டெக் இன்ஜினியரிங் நிறுவனத்தினால் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

திறந்துவைக்கும் நிகழ்வுக்குப் பின்னர், தொழிற்சாலை வளாகத்தைப் பார்வையிட்ட



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சைக்கிள், மின்சார மோட்டார்சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளை இணைக்கும் செயற்பாடு குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

வோல்டா நிறுவனத்தின் திறமைகளை பார்வையிடக் கிடைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிறுவனத்திற்கு அரசாங்கத் தினால் வழங்கக்கூடிய ஆதரவு தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். பசுமை வலுசக்தி பொருளாதாரத்தை உருவாக்க எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையை நாம் பாராட்ட வேண்டும். இது போன்ற திட்டங்களை செயல்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை, பசுமை வலுசக்தி பொருளாதாரத்திற்கு மாற்ற அனைவரும் பாடுபட வேண்டும். இப்போது உலக நாடுகள் பசுமை வலுசக்தி பொருளாதாரத்தை நோக்கி நகர்கின்றன. இலங்கை என்ற வகையில் நாமும் அந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்த ஐந்தாண்டுகளில், பசுமை வலுசக்தி பொருளாதாரத்தை நோக்கி நகர்வதன் மூலம் பல நன்மைகளை அடைய இலங்கைக்கு வாய்ப்புள்ளது. அதற்கு, சுயமாக முன்னேறும் இத்தகைய முதலீட்டாளர்களும், வர்த்தகர்களும் நாட்டுக்குத் தேவை. எனவே, ஜகத் மாகவிடவின் இந்த வர்த்தகத்துக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன் - என்றார்.

நீர்ப்பாசனம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, சிறிபால கம்லத், பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசிறி சூரியாரச்சி, வோல்டா ஒட்டோ டெக் இன்ஜினியரிங் நிறுவனத்தின் தலைவர் ஜகத் மாகவிட உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தெஹியோவிற்ற த.ம.வி. பழைய மாணவர்களின் மாபெரும் கிரிக்கெட் தொடர்

கே/தெஹி/தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பழைய மாணவர்களுக்கான சிநேகபூர்வ கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை ருவான்வெல்ல பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

'தமிழன்' ஊடக நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெறவுள்ள இந்தத் தொடரில் தெஹியோவிற்ற பழைய மாணவர்களை பிரதிநிதித்துவப்படுத்தி 24 அணிகள் பங்குபற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலய வரலாற்றில் முதன்முறையாக இடம்பெறும் இந்த கிரிக்கெட் தொடரை கண்டுகளிப்பதற்காக அனைவரையும் அன்போடு அழைக்கிறார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 0766089840 என்ற இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென பாடசாலை பழைய மாணவர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

# இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புகள்

## ஜப்பானில் ஏற்பாடு

ஜப்பானில் நிர்மாணத் துறையில் இலங்கை ஆண்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் 10 மார்ச் 2023 அன்று மாலை 04.30 மணிக்குள் அல்லது அதற்கு முன் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பணியகம் கேட்டுக்கொண்டுள்ளது.

விண்ணப்பங்களை பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slbfe.lk இல் காணலாம் மற்றும் தேவையான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் பணியகத்தின் மின்னஞ்சல் titp@slbfe.lk க்கு மின்னஞ்சல் அனுப்பப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய தேர்தல் திகதி...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் அரசியலமைப்பு ரீதியாக முன்னெடுத்த செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையுடன் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளும் விடயத்தில் தலையிடுமாறு கோரி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் கடிதமொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியிலேயே இன்று தேர்தலுக்கான மாற்று திகதியொன்றை இன்று (03) அறிவிப்பதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆயினும், ஏப்ரல் மாதத்தின் இடையில் அல்லது மே மாதத்தின் முதல் வாரத்தில் தேர்தலுக்கான திகதி குறிக்கப்படலாம் என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

அதற்கமைய, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தேர்தலை நடத்துவதற்கான நிதியை அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இலங்கையின் தேர்தல் நிலைமை தொடர்பில் சர்வதேசத்தின் தலையீடு வரவேற்கத்தக்க விடயம் என்றும் தேர்தலை காலந்தாழ்த்துவதற்காக ஆணைக்குழுவை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலான தொடர்ச்சியான சூழ்ச்சிகளை நிறுத்திவிட்டு அரசாங்கம் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க நேற்று சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க தொடர்ந்து முயற்சித்தால் இலங்கை மீதான சர்வதேசத்தின் அழுத்தம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வேலைநிறுத்தம்...

அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரியுள்ளார்.

இருந்தபோதும், எரிபொருள் கூட்டுத்தாபனம் மற்றும் எரிபொருள் களஞ்சியங்களின் பணியாளர்களில் 75 சதவீதமானோர் நேற்று முன்தினம் சேவையாற்றுவதாக தனக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதாவது,

அநேகமான ஊழியர்கள் மருத்துவ விடுமுறையில் செல்லவும் தொழிற்சங்கங்கள் எரிபொருள் விநியோகத்தை தாமதப்படுத்தவும் முயற்சித்திருந்தாலும், நேற்று முன்தினம் திட்டமிட்டிருந்தபடி மாலை 6.00 மணியளவில் 80 சதவீதமான எரிபொருள் விநியோகங்கள் நிறைவுசெய்யப்பட்டிருந்தன.

அதற்கமைய, நேற்று முன்தினம் பணிக்கு வந்திருந்த மின்சார சபை ஊழியர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட விபரங்கள் தொடர்பில் அறிக்கையும் கோரியுள்ளேன்.

எரிபொருள் களஞ்சியங்களில் நேற்று முன்தினம் ஊழியர்களின் வருகை வீதம் சாதாரண நிலையிலேயே இருந்தது. கொலன்னாவையில் 71 சதவீதமானோரும், அநுராதபுரத்தில் 75 சதவீதமானோரும், பதுளையில் 55 சதவீதமானோரும், மட்டக்களப்பில் 76 சதவீதமானோரும், காலியில் 77 சதவீதமானோரும், அப்புத்தளையில் 78 சதவீதமானோரும், கொட்டகலையில் 74 சதவீதமானோரும், குருநாகலில் 73 சதவீதமானோரும், மாத்தறையில் 65 சதவீதமானோரும், பேராதெனியவில் 82 சதவீதமானோரும், சரசவி உயண களஞ்சியத்தில் 83 சதவீதமானோரும், முத்துராஜவெலவில் 37 சதவீதமானோரும், துறைமுகத்தில் 23 சதவீதமானோரும் பணியில் ஈடுபட்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### கச்சதீவு புனித...

கடற்படையினருடன் இணைந்து புனித அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இராமேஸ்வரம் அருகே வங்கக்கடற்பரப்பில் அமைந்துள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆண்டுதோறும் மார்ச் மாதம் நடைபெறும் திருவிழா புகழ்பெற்றது. அந்தவகையில் இவ்வாண்டு திருவிழா இன்று ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாவில் தமிழகத்திலிருந்து 2,408 பேரும் இலங்கையிலிருந்து 4 ஆயிரம் பேரும் பங்கேற்கவுள்ளனர்.

இந்நிலையில், திருவிழாவுக்கு இந்திய மத்திய அரசு சார்பில் ரூ.4 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உணவு, குடிநீர், மருத்துவ உதவி உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியாவுக்கான துணை தூதரகம் அறிவித்துள்ளது.

### நிதி தெரிவுக்குழுத்...

பிரதம ஏற்பாட்டாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து எதிர்க்கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் தெரிவுக்குழுவின் தலைவர் பதவிக்கு கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்தப் பிரேரணை தொடர்பில் சபாநாயகரின் தலைமையில் கூடவுள்ள அனைத்து கட்சிகளினதும் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது.

கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர்களை அந்தந்த குழுக்களின் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் தெரிவுசெய்கின்ற போதும், பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அங்கீகாரத்துடனே அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் நியமனம் இடம்பெறுகின்றது.

ஆளும் கட்சியினரின் பிரேரணைக்கமைய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க, அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட நிலையில், அவர் பதவியை இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஐ.எம்.எவ்...

நிதி அமைச்சிடம் வழங்கியுள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

2022 - 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் செலுத்தவேண்டிய கடனை செலுத்துவதற்கு இலங்கைக்கு 02 வருட கால அவகாசம் வழங்கப்படும் என இணக்கப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக மாவோ நின்ங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு சீனா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார்.

இலங்கையின் கடன் சுமையை குறைப்பதற்கும் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கும் சர்வதேச நாணய நிதியத்துடன் சீனா இணைந்து செயற்படும் - என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் இந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

### தேர்தலுக்கு...

தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி மே மாதத்தின் முதல் வாரத்தில் தேர்தலுக்கான திகதி குறிக்கப்படலாம் என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இவ்வருடத்தில் தேர்தல் நடத்த நிதி ஒதுக்கீட்டை செய்ய முடியாத நிலை இருப்பதாகவும் தேர்தல் இதேபோன்று இவ்வருடம் முழுவதும் ஒத்திவைக்கப்படும் நிலைமையே இருப்பதாகவும் அரச உயர்மட்ட தகவல்கள் தெரிவித்தன. அந்த அடிப்படையிலேயே தேர்தலுக்கான நிதி திறைசேரியால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படமாட்டாதென்று தெரிகிறது.

### பூகம்பத்தால்...

தெரிவித்துள்ளார் .

உலகில் தற்போதுள்ள தொழில்நுட்பத்தின்படி குறித்த தினத்தில் நிலநடுக்கம் ஏற்படுமென முன்கூட்டியே அறிவிக்க முடியாது. ஜப்பான், துருக்கி அல்லது உயர் தொழில்நுட்பம் கொண்ட மற்ற நாடுகளால் கூட நிலநடுக்கம் ஏற்படும் திகதியை அறிவிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டின் அமைவிடத்தின்படி வலுவான நிலநடுக்கம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகவே காணப்படுவதாக புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட புவியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்..

சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கங்களைப் பார்க்கும்போது, ரிச்டர் அளவுகோலில் இது மூன்று மற்றும் ஐந்து ரிச்டர் அளவிலேயே ஏற்பட்டுள்ளன. அந்த நிலநடுக்கங்கள் பல்லேகல, புத்தல, ஹக்மன, மஹகனதரவ ஆகிய பகுதிகளில் பதிவாகியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

### ஐ.ஜி.பி...

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தனது சேவையை முடித்து இம்மாதம் 20ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு மேற்படி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் சார்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தனித்தனியான விடயங்களை முன்வைப்பதற்கும் பல சிரேஷ்ட அமைச்சர்கள் முனைவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

### பாடசாலை மாணவி...

தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பெறப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேற்படி சந்தேக நபரான ஆசிரியரை கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, குறித்த சிறுமி வைத்திய பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### தேர்தலை நடத்தாவிடின்...

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்துவதற்கு குறைந்தது 4.5 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. தலையிட்டு அதனைப் பெற்றுக்கொடுக்குமாறு அறிவித்து சபாநாயகருக்கு, தேர்தல் ஆணையாளர் நாயகம் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார். தேர்தலை நடத்துவதற்கான தீர்ப்பொன்றை வழங்குமாறு கோரி நீதிமன்றத்திலும் மனுத்தாக்கல் செய்திருந்தோம். நிதிப் பிரச்சினையை பாராளுமன்றத் தேர்தல் ஆணைக்குழுவும் கலந்துரையாடி முடிவொன்றை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரத்தில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு தரப்பை சாடுகிறார்களே தவிர, தீர்வை பெற்றுக்கொடுப்பதாக இல்லை. இந்த கடிதத்துக்கான பதில் என்னவென்று சபாநாயகரிடம் நாங்கள் கோரியிருந்தோம்.

இந்நிலையில், உள்ளூர் நிறுவனங்களினூடாக தேர்தலொன்றை பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்றால் சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்வோம் என்று சபாநாயகருக்கு தெளிவாக அறிவித்திருக்கிறோம். ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவோம் - என்றார்.

### நலன்புரி தரவுக்...

உரிய திகதிக்கு முன்னர் தரவை வழங்க முடியாத விண்ணப்பதாரர்கள் நன்மைகளை இழக்க நேரிடும் என்றும் நலன்புரி நன்மைகள் சபை வலியுறுத்துகின்றன. அதிகாரிகளுக்கு துல்லியமான தரவை துரிதமாக வழங்குமாறு அனைத்து விண்ணப்பதாரிகளிடமும் நலன்புரி நன்மைகள் சபை கோரியுள்ளது.

2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் விதிகளின் கீழ் 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி எண் 2302/23 மூலம் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நலன்புரி நன்மைகளை வழங்குவதற்கான கட்டளைகள் திருத்தப்பட்டு வெளியிடப்பட்ட 2022 டிசம்பர் 15 திகதியிட்ட 2310/30 எனும் அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நலன்புரி நன்மைகளுக்கு தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்களைக் கோரும் செயல்முறை ஏற்கனவே நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அதன்படி, பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 37,28,139 ஆகும்.

இவற்றில், சரியான தரவுகளை 1,02,143 விண்ணப்பதாரிகள் வழங்கியுள்ளனர்.

நலன்புரி நன்மைகளை வழங்குவதற்காக தகுதியானவர்களை அடையாளங்காணும் திட்டத்தில் தகவல்களை ஆராய்வதற்கான தரவு சேகரிப்புத் திட்டத்திற்கு நாடு முழுவதும் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கும் வகையில் 6,728 அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 3,190 அபிவிருத்தி அதிகாரிகள், 494 பொருளாதார அபிவிருத்தி அதிகாரிகள், 205 கிராம உத்தியோகஸ்தர்கள், 1,127 வேறு அதிகாரிகள் மற்றும் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட 1,712 பேர் இதில் அடங்குவர்.

விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு துல்லியமான தகவல்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு தேசிய அடையாள அட்டை அல்லது தேர்தல் பதிவு இலக்கம் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தோடு சிறுநீரக நோயாளிகள் மற்றும் ஊனமுற்றோர் மருத்துவ அறிக்கைகள், நீர் மற்றும் மின்சார கட்டணப் பட்டியல்களை சமர்ப்பிக்க முடியும்.

உண்மையை சொல்வோம்- சரியானவர்களுக்கு நன்மைகளை வழங்குவோம் என்ற தொனிப்பொருளின் கீழ் செயல்படுத்தப்படும் தரவு சேகரிப்பு பணிகள் நிறைவடைந்ததும் சரியான தரவுகளை வழங்கியதற்காக அறிவிப்பில் விண்ணப்பதாரிகள் கையொப்பமிடப்பட வேண்டும், மேலும் ஒவ்வொரு வீட்டிற்கும் QR குறியீடு வழங்கப்பட இருப்பதோடு இந்த QR குறியீட்டைப் பயன்படுத்தி தாம் வழங்கிய தரவின் சுருக்கத்தைப் பார்வையிட முடியும்.

### உடல் எடையால்...

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சனத்தொகையில் 2 பில்லியனுக்கும் அதிகமானவர்கள் அதிக உடல் நிறைகொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் 650 மில்லியன் பேர் அதிக உடல் பருமன் கொண்டவர்களாக இருக்கிறார்கள். 39 சதவீதமானவர்கள் உயரத்துக்கு ஏற்ற நிறையை விட அதிக நிறைகொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் 19 சதவீதமானவர்கள் அதிக உடல் பருமன் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

தொற்றா நோய் நிலைமையின் எச்சரிக்கை நிலைமையை கருத்திற்கொண்டு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை ஆய்வுகளை முன்னெடுப்போம். 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி 22.5 சதவீதமானவர்கள் அதிக நிறை மற்றும் அதிக பருமனினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். 2021ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், அதிக உடல் எடைகொண்ட ஆண்களின் எண்ணிக்கை 30 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. 2015ஆம் ஆண்டு 34 சதவீதமாக இருந்த அதிக உடல் எடைகொண்ட பெண்களின் எண்ணிக்கை, 2021ஆம் ஆண்டு 48 சதவீதமாக அதிகரித்திருக்கிறது.

எனவே, நூற்றுக்கு 15 சதவீதமான பெண்களும், 6.3 சதவீதமான ஆண்களும் உடல் எடை அதிகரிப்பினால் பாதிப்படைகிறார்கள்.

நிறை அதிகரிப்பு, உடல் பருமன் அதிகரிப்பு அல்லது ஊட்டச்சத்து குறைபாடு என்று கூறும்போது அதனை எம்மால் வகைப்படுத்த முடியும். ஆனால், உயரத்துக்கு ஏற்ற நிறை என்ற வகைப்படுத்தலின் பிரகாரம் உடல் நிறை குறியீட்டு எண் 23 சதவீதத்தை நிலையாக பேணவேண்டியது அவசியமாகும்.

அளவுக்கு அதிகமான உணவை உட்கொள்ளும்போது, அவற்றை எண்ணெயாக எமது உடலில் சேமிக்கப்படுகிறது. அதுவே உடல் எடை அதிகரிப்புக்கும் காரணமாக அமைகின்றது. இதனால் தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான எச்சரிக்கை நிலைமையும் அதிகரிக்கின்றது.

இதனால், இருதயம் சார்ந்த நோய்கள், உயர் இரத்த அழுத்தம், பக்கவாதம், பல்வேறு புற்றுநோய்கள் உள்ளிட்ட பல்வேறு தொற்றா நாட்பட்ட நோய்கள் அதிகரிக்கின்றன. இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அதிக உடல் எடையே பிரதான காரணமாக இருக்கிறது. இந்த நோய் நிலைமைகளை தடுக்கவேண்டுமெனில் முறையான உணவுப் பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சிகள் என்பவற்றை மேற்கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது - என்றார்.

# எரிவாயு சிலிண்டரைத் தூக்க மறுத்த மாணவன் மீது அதிபர் தாக்குதல்

## காயங்களுக்குள்ளான மாணவன் வைத்தியசாலையில் சேர்ப்பு

இரண்டு எரிவாயு சிலிண்டர்களை அதிபரின் வாசஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லவில்லை என்ற குற்றச்சாட்டின்பேரில் மாணவரொருவரை பாடசாலை அதிபர் தாக்கியதில் காயமடைந்த மாணவன் அம்பானை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக தம்புள்ளை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நாவுல மொண்டி கோபல்லாவ மகா வித்தியாலயத்தில் தரம்-10இல் கல்வி கற்றுவரும் எஸ்.எம்.நீலேகா சித்தும் (வயது 15) என்ற மாணவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளதாக அவரது பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாடசாலை கட்டடத்திலிருந்து அதிபரின் தனிப்பட்ட வீட்டிற்கு இரண்டு எரிவாயு சிலிண்டர்களை எடுத்துச் செல்லுமாறு அதிபர் தன்னிடம் கூறியதாகவும் தான் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதாகவும் பயிற்சிக்குப் பிறகு அதனை எடுத்துவைப்பதாகவும் அதிபரிடம் மாணவன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அதிபர் தன்னை கட்டையால் தாக்கியதாக மாணவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்த பாடசாலை அதிபர் எஸ்.எம்.நிமால் பண்டார தெரிவிக்கையில், குறித்த மாணவர் தனது கோரிக்கையை நிறைவேற்ற மறுத்ததால் தான் பொறுமை இழந்ததாகவும், மாணவர்கள் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆனால், தாம் வெறுப்பின் மூலம் மாணவனை தாக்கவில்லை - என்றார்.

# கைதடியில் பெண்ணொருவர் தூக்கிட்டுத் தற்கொலை

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி கிழக்கு கைதடி பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் நேற்று (02) வியாழக்கிழமை வீட்டில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

65 வயதான தவமணி என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இ.போ.ச. பணியாளர்களுக்கு பெப்ரவரி மாத சம்பளத்தை வழங்க அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் இணக்கம்





இலங்கை போக்குவரத்து சபையின் பணியாளர்களுக்கான 2023 பெப்ரவரி மாத சம்பளத்தை இதற்கு முன்னரான மாதங்களில் வழங்கிய நடைமுறைக்கமைய தாமதமின்றி வழங்குவதற்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழு இணக்கப்பாட்டை வழங்கியது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் (கலாநிதி) பந்துல குணவர்தன தலைமையில் அண்மையில் நடைபெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிலேயே இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபை கடந்த காலத்தில் அரசியல் மயப்படுத்தப்பட்டமையால் பணியாளர்களை உள்ளீர்ப்பதில் சரியான நடைமுறைகள் பின்பற்றப்படாமையால் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

குறிப்பாக, இவர்களுக்குக் காணப்படும் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவுடன் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இயங்க முடியாத நிலையிலுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 400 பஸ்கள் உள்ளடங்கலாக 1800இற்கும் அதிகமான பஸ்களை இவ்வருடம் சேவையில் இணைத்துக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதற்குத் தேவையான சாரதிகள் மற்றும் நடத்துனர்களை ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குழுவில் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் கடன் திட்டத்தின் கீழ் 500 சிறிய பஸ்கள் வழங்கப்படும் என்றும், மேலும் 100 பெரிய பஸ்கள் அடுத்த வருடத்தில் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, போதிய நிதி ஒதுக்கீடுகள் இன்மையால் பல்வேறு வீதி அபிவிருத்திப் பணிகளை இடைநிறுத்தவேண்டி ஏற்பட்டுள்ளமை குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. வெளிநாடுகளின் கடன் திட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கான கடன்கள் யாவும் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும், சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுமாயின் இடைநிறுத்தப்பட்டுள்ள ஏனைய கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

அத்துடன், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் 2022 ஒக்டோபர் 10ஆம் திகதிய 2301/17ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி மற்றும் 2022 நவம்பர் 14ஆம் திகதிய 2306/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பனவற்றுக்கும் இங்கு அனுமதி வழங்கப்பட்டது.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் மாசி மாதம் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்**: வாகனம் செலுத்துவது, பயணிப்பது இரண்டிலும் கவனமாக செயல்பட வேண்டும்,

**ரிஷபம்**: எதிர்பாராத வகையில் நண்பர் ஒருவரின் உதவி கிடைக்கும், மனத்துணிவுடன் காரியம் சாதிப்பீர்கள்.

**மிதுனம்**: மனதில் ஒரு குழப்ப நிலை இருக்கும், பணக் கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை.

**கடகம்**: புகழ்,செல்வாக்கு அதிகரிக்கும், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**சிம்மம்**: அலைச்சலும் காரியக் கேடும் நிறைந்த நாள், அளவுக்கு மீறிய பணச் செலவு.

**கன்னி**: எதிர்பாராத பண வரவு உண்டு, தொழில் வியாபார மேன்மை.

**துலாம்**: தொழிலில் சாதனை செய்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் வெற்றி.

**விருச்சகம்**: பெற்றோர் உடல் நிலையில் கவனம் வேண்டும், பூர்வீக சொத்துப் பிரச்சினை.

**தனுசு**: கடுமையான அலைச்சல், அளவுக்கு மீறிய பணச் சேதம்.

**மகரம்**: கடல் கடந்து பயணிப்பீர்கள், அல்லது வெளிநாட்டு உதவிகளைப் பெறுவீர்கள்.

**கும்பம்**: சத்துருக்களை வெற்றிகொள்வீர்கள், கடனிலிருந்து விடுபடுவீர்கள்.

**மீனம்**: புத்திரர்களால் கவலை, தொழில் ரீதியில் புதிய சிக்கல்.

**திதி** : ஏகாதசி மு.ப.9.11 வரை பின் துவாதசி

**நட்சத்திரம்** : புனர்பூசம் பி.ப.3.43 வரை பின் பூசம்

**யோகம்** :சித்த யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை** : தென் கிழக்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப. 6.25 - 7.25 மணி வரை

**ராகு காலம்** : 10.55 – 12.25 மணி வரை

**எமகண்டம்** : 3.25 - 4.55 மணி வரை

**குளிகை** : 7.55 - 9.25 மணி வரை

**சந்திராஷ்டமம்** : தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : திருவாதிரை,சுவாதி, சதயம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : ஏகாதசி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# இணையப் பாதுகாப்பு – இணையத் தொகுதி தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் செயலமர்வு






அமைச்சில் பணியாற்றும் பணியாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் இராஜதந்திர அதிகாரிகளுக்கான இணையப் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது. திறன் அபிவிருத்தித் திட்டங்களின் வரிசையில் இந்தச் செயலமர்வு இரண்டாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டது. அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் இணையப் பாதுகாப்பு மற்றும் இணையத் தொகுதி குறித்த ஊடாடும் செயலமர்வை நடத்தினர்.

பங்கேற்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன, செயற்றிறன், சேமிப்பு மற்றும் மேம்பட்ட சேவைக்கான கருவியாக பொதுத்துறையில் டிஜிட்டல் மயமாக்கலுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ள நேரத்தில் இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றில் டிஜிட்டல் மற்றும் இணையத்தின் தாக்கத்தை கருத்திற்கொண்டு, அபிவிருத்தியடைந்துவரும் இணையப் பாதுகாப்பு சிக்கல்கள் இராஜதந்திரப் பணிகளுக்கு பொருத்தமானவையாகும். வெளிவிவகார செயலாளர் இது சம்பந்தமாக சர்வதேச மாற்றங்களை அறிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

தேசிய கணினி அவசரநிலை தயார்நிலைக் குழுவின் தலைவர் ரோகன் முத்தையா, ஐ.சி.டி.ஏவின் பொது சட்டத்தரணி ஜயந்த பெர்னாண்டோ, போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் இணையக் குற்றம் மற்றும் பணமோசடிப் பிரிவின் தலைவர் க்ளென் பிரிச்சார்ட், பிரண்டிக்ஸ் டிஜிட்டல் மாற்றத்திற்கான தலைமை செயற்பாட்டு அதிகாரி ஓஷத சேனநாயக்க, மெட்டாவின் கொள்கைத் தலைவர் செனுர அபேவர்தன, சுயாதீன சட்ட வல்லுனரும், ஆலோசகருமான ரேவன் வீரசிங்க, சட்டத்தரணியும், தகவல் தனியுரிமை நிபுணருமான சந்துனி விக்கிரமசிங்க மற்றும் சிக்ரா ஹோல்டிங்ஸின் குழுமப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான போஷன் தயாரத்ன உட்பட முன்னணி அரசாங்க, தனியார் துறை மற்றும் ஐ.நா. நிபுணர்கள் இந்த செயலமர்வில் உரையாற்றினர்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பொருளாதார விவகாரப் பிரிவின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் விசேட திட்டப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் மதுரிகா ஜோசப் வெனிஞ்ஜரால் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

# பிரித்தானிய வெளிவிவகார துணைப் பணிப்பாளர் யாழ். விஜயம்



யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய வெளிவிவகார துணைப் பணிப்பாளர் மாயா சிவஞானம், வடக்கில் பல்வேறு அமைப்புகள், சிவில் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது வடக்கின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி நகர்வுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக, யுத்தத்திற்குப் பின்னரான வடக்கின் அபிவிருத்தியில் அரசாங்கங்களின் பங்களிப்புகள் மற்றும் பிரித்தானிய அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் வடக்கின் நல்லிணக்க வேலைத்திட்டங்கள் குறித்தும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தும் ஆளுநர் தெளிவுபடுத்தியுள்ள நிலையில், வடக்கு மக்களின் நல்லிணக்க நகர்வுகளில் சர்வதேசத்தின் பங்களிப்பு குறித்தும் பிரித்தானிய வெளிவிவகார துணைப் பணிப்பாளர் மாயா சிவஞானம் எடுத்துரைத்துள்ளார்.

# தனியார் வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள அரச நிறுவனங்களுக்கு அனுமதி

தனியார் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிப்பதற்காக அமைச்சு, திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற இந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது, நிதியமைச்சின் கீழ் குறிப்பிட்ட கணக்குகளை தனியார் வங்கிகளில் ஆரம்பிக்க இடமளிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணிப்புறக்கணிப்பால் அரச வங்கிகள் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியாது போனாலும் நாணய கடிதங்களை வெளியிடுதல் உள்ளிட்ட நிதி நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பிப்பது குறித்து நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பணிப்புறக்கணிப்பால் அரச வங்கிகளின் செயற்பாடுகள் முடங்கி மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொண்டுவர நாணய கடன்களை விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# நோயாளர்கள் மீது கழன்று விழுந்த மின்விசிறி

ஹொரணை மாவட்ட வைத்தியசாலையில், வாராந்த வைத்திய பரிசோதனைக்காக சென்ற இரண்டு நோயாளர்கள் மீது, மின்விசிறி ஒன்று கழன்று வீழ்ந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

புற்றுநோய்க்கான வைத்திய பரிசோதனைக்குச் சென்ற நோயாளர்கள் இருவரே இந்தச் சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதன்போது, குறித்த இருவரும் காயமடைந்த நிலையில், ஒருவர் அதே வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளார். மற்றுமொரு நபருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி 75 பேரிடம் பணம் மோசடி செய்த நபர் கைது

கனடாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி மக்களை ஏமாற்றிய நபர் ஒருவரை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

அந்த நபர் வேலை வாங்கி தருவதாகக் கூறி 75 பேரிடம் மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவரால் ஏமாற்றப்பட்டவர்கள் 5 இலட்சம் ரூபா தொடக்கம் 22 இலட்சம் ரூபா வரையில் பணம் கொடுத்துள்ளதாகவும், சந்தேக நபர் கனடாவில் வேலை பெற்றுத் தருமாறு ஒருவரிடம் 33 இலட்சம் ரூபா பணத்தைக் கேட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபருடன் மேலும் ஒருவருக்கு தொடர்பு இருப்பதாகவும், அரசியல் சக்திகளின் தலையீட்டினால் இது நடந்ததாகவும் பண மோசடியில் சிக்கிய இளைஞன் ஒருவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இந்த பண மோசடியில் சிக்கியவர்கள் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று முறைப்பாடு செய்தபோதும் பொலிஸார் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெல்லவாயவில் வீடொன்று உடைத்துக் கொள்ளை

வெல்லவாயவில் வீடொன்றிலிருந்து 4 இலட்சத்து 7 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் உரிமையாளர் பெப்ரவரி 7ஆம் திகதி காலியிலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு நேற்று முன்தினம் (01) வீடு திரும்பியுள்ள நிலையில், குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் வீட்டின் உரிமையாளர் வெல்லவாய பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் வந்து விசாரணை களை மேற்கொண்டபோதும் வீட்டினுள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் எவ்வித இடமும் இல்லையென தெரிவித்துள்ளதுடன், வீட்டுச் சாவியை பயன்படுத்தியே கதவைத் திறந்து இந்த பொருட்கள் எடுக்கப்பட்டிருக்கலாமெனவும் பொலிஸார் கருதுகின்றனர்.

வீட்டின் உரிமையாளரும் அவரது கணவரும் சில காலமாகப் பிரிந்திருந்த நிலையில், இந்தப் பொருட்களை கணவர் எடுத்துச் சென்றாரா என பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


## பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2023 மார்ச் மாதம் 24 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது**

**தங்க கடன் பிரிவு**
**வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ**
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

**வெலிபல் ஃபினான்ஸ்**

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com


**2023, மார்ச் 03ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

## ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு தந்திருக்கும் புதிய நம்பிக்கை

பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள இலங்கை, பொருளாதார ரீதியில் இன்று படிப்படியாக முன்னேற்றத்தை கண்டு வருவதாக கூறப்படுகின்ற நிலையில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் வலுவடைந்துள்ளதை இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின் ஊடாக அவதானிக்க முடிகின்றது.

இதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 343 ரூபா 97 சதமாகவும், விற்பனை விலை 356 ரூபா 73 சதமாகவும் காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி பீடம் ஏறும் போது, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 177 ரூபாவில் காணப்பட்டது. 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி, அதாவது சரியான ஒரு வருடத்திற்கு முன்பாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 201 ரூபா 89 சதமாகக் காணப்பட்டது.

இந்நிலையில், இலங்கை ரூபாவின் பெறுமதி 2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு பின்னரான காலத்தில் பாரிய சரிவை சந்தித்திருந்தது. கடந்த ஆண்டு மார்ச்மாதம் 08ஆம் திகதி அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 202 ரூபா 09 சதமாக காணப்பட்டு, அடுத்த நாள் 229 ரூபா 50 சதம் வரை சடுதியாக வலுவிழந்தது.

இந்த வலுவிழப்பானது, தொடர்ந்தும் பல மடங்குகளாக அதிகரித்து, இலங்கை பொருளாதாரத்தை பாரிய சவாலுக்கு உட்படுத்தியிருந்தது. குறிப்பாக 2022ஆம் ஆண்டு மே மாதம் 09ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையான காலத்திற்குள் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 364 ரூபா 76 சதமாக பதிவாகியிருந்ததாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியின் அறிவிப்பின் பிரகாரம், 364 ரூபா 76 சதமாக நிர்ணயிக்கப்பட்ட அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி, தனியார் முகவர் நிலையங்கள் மற்றும் கறுப்பு சந்தையின் ஊடாக சுமார் 410 ரூபா வரை சென்றிருந்தது. 2019 மற்றும் 2022ஆம் ஆண்டிற்கு இடையிலான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சுமார் 187 ரூபாவினால் வலுவிழந்திருந்தது. இது நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய தாக்கத்தை செலுத்தியிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் வசம், டொலர் கையிருப்பு பாரியளவில் குறைவடைந்ததையடுத்து, நாடு பாரியதொரு தாக்கத்தை எதிர்நோக்கியிருந்தது.

இலங்கை எதிர்நோக்கிய உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் மற்றும் கொரோனா பெருந்தொற்று ஆகிய காரணங்கள் இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல பிரதான காரணங்களாக அமைந்திருந்தன. சுற்றுலாத்துறை, ஆடை, தேயிலை, இறப்பர் ஏற்றுமதி உள்ளிட்ட துறைகளின் ஊடாக தமக்கான வருமானத்தை பெரிதும் நம்பியிருந்தது. எனினும், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றது. இத்தாக்குதல் காரணமாக, சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் நடத்தப்பட்ட 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 166,975 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்த போதிலும், அடுத்த மாதம் அந்த தொகையானது 37,802ஆக வீழ்ச்சி கண்டிருந்தது. அதையடுத்து, 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு பின்னரான காலத்தில் கொவிட் பெருந்தொற்று காரணமாக நாடு முழுமையாக முடக்கப்பட்டது. 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 71,370 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்த நிலையில், அந்த மாதம் கொவிட் தொற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக முடக்கநிலை அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, ஏப்ரல் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு ஒரு சுற்றுலாப் பயணி கூட வருகை தரவில்லை. எனினும், டிசம்பர் மாதம் 393 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தார்கள். 2019ஆம் ஆண்டு முழுமையாக 19 இலட்சத்து 13 ஆயிரத்து 702 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த நிலையில், 2020ஆம் ஆண்டு மொத்தமாகவே 5 இலட்சத்து 7 ஆயிரத்து 704 சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே வருகை தந்திருந்தார்கள்.

2021ஆம் ஆண்டு அந்த தொகையானது ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 495ஆக குறைவடைந்தது. இதனால், இலங்கைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் முழுமையாக இழக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தமது வருமானத்தை இழந்து இலங்கை, கையிருப்பிலிருந்த டொலர் உள்ளிட்ட சொத்துகளையும் இழந்தது. இது பாரிய பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தது. எனினும், இன்று சுற்றுலாத்துறையில் சாதகமான முன்னேற்றத்தை காணக்கூடியதாக உள்ளது.

2023ஆம் ஆண்டின் கடந்த இரு மாத காலப் பகுதியில் மாத்திரம் 210,184 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதுடன், சுற்றுலாத்துறையின் ஊடாக ஜனவரி மாதத்தில் மாத்திரம் 162 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு, மின்சார வெட்டு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு எனப் பல்வேறு சவால்களை சந்தித்த நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிராக இலங்கையில் போராட்டங்கள் வெடித்தன.

இலங்கை வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை குறுகிய காலத்திற்கு செலுத்தாதிருக்கின்றமை, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்தமை, இறக்குமதி கட்டுப்பாடுகள், ஏற்றுமதி வருமானம் சற்று அதிகரித்துள்ளமை, வெளிநாட்டுப் பணியாளர்களின் வருமானத்தின் வருகை அதிகரித்துள்ளமை மற்றும் உலக வங்கியிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற உதவித்திட்டம் ஆகியவற்றினால் கிடைக்கப் பெற்ற டொலரினால் நாட்டின் கையிருப்பு அதிகரித்துள்ளது.

400 மில்லியன் டொலரை, இலங்கையிலுள்ள 3 வங்கிகளின் ஊடாக வழங்கவுள்ளதாக உலக வங்கி அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது. உதவியாக வழங்கப்படும் இத்தொகையை இறக்குமதிகளுக்காக பயன்படுத்த முடியும் என்றொரு அறிவிப்பு வந்துள்ளது. இந்த அறிவிப்பானது, சந்தையில் ஒரு சாதகமான மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. சந்தையில் நம்பகத்தன்மையை அதிகரித்துள்ளது. அதனாலேயே ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது என பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ரூபாவின் பெறுமதி வலுவாகியமை பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் மக்களுக்கு வெளிச்சத்தை தந்திருக்கிறது.




# பிறமொழி கலப்பின்றிப் பேசுவோம்!

தமிழ்மொழி இனிமையான மொழி. தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்பதுதான் பொருள். தமிழ்மொழி இலக்கிய அளவிலும் இனிமை கொண்டது. மொழி அளவிலும் இனிமை கொண்டது. ஆகவேதான், தமிழ்மொழியை அதன் இனிமை, பெருமை, உயர்வு கருதி மொழியியல் அறிஞர்கள் 'உயர்தனிச் செம்மொழி' எனப் பாராட்டுகிறார்கள். மேலும், உலக மொழிகளில் உயர்வானது தமிழ்மொழி. அதிலுள்ள இலக்கிய, இலக்கணங்கள் பிற மொழிகளைவிட எண்ணிக்கைகள் அதிகம்.

தமிழ்மொழியின் உயர்வுக்கு அதன் தொன்மையும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. திருவள்ளுவரின் திருக்குறள், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம், மணிவாசகரின் திருவாசகம் முதலான நூல்கள் உலகப்புகழ் பெற்றவையாகத் திகழ்கின்றன. மக்களின் உயர்வுக்கு வழிகாட்டுகின்ற இலக்கியங்கள் தமிழில் நிரம்ப உண்டு.

இந்தியாவில் இதிகாசம் என்று போற்றப்படும் நூல்கள் இரண்டு. அவை வால்மீகி இயற்றிய இராமாயணமும் வியாசர் இயற்றிய மகாபாரதமும் ஆகும். இந்நூல்கள் சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்தாலும், இவற்றில் தமிழ்நாடு, தமிழ் மொழி பற்றி பல்வேறு குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

வால்மீகி இராமாயணத்தில் இராமனின் மனைவி சீதையை, இராவணன் இலங்கைக்குத் தூக்கிச் சென்று விட்டான். இராமன் சீதையைத் தேடிச் செல்கிறான். குரங்கு வீரர்கள் இராமனுக்கு உதவி செய்தனர். அவர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். பல இடங்களில் தேடினர். சில குரங்கு வீரர்கள் இலங்கைக்கே தேடிச் சென்றனர். அப்போது இலங்கைக்குப் போக வழி தெரியவில்லை. அந்த இடத்தில் வால்மீகி வழி கூறுகிறார்.

"இலங்கைக்குப் போகும் குரங்கு வீரர்களே! நீங்கள் இலங்கைக்குப் போகும் வழியில் ஒரு நாட்டைப் பார்ப்பீர்கள். அந்நாட்டின் பெயர் பாண்டிய நாடு. அந்நாட்டின் மன்னன் பாண்டியன். அங்கு பெரிய கோட்டை இருக்கும். அந்தக் கோட்டைக்குப் பெரிய வாயில் இருக்கும். அந்த வாயிலில் பெரிய கதவுகள் இருக்கும். அந்தக் கதவுகள் தங்கத்தால் அமைந்திருக்கும்.

கதவுகளில் முத்துகள், மணிகள் பதிக்கப்பட்டிருக்கும். அவை பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். அந்த நாட்டில் இனிமையான மொழி ஒன்று பேசப்படும்'' என்று கூறுகிறார் வால்மீகி. அதாவது தமிழ் மொழியின் இனிமையை அன்றே உணர்ந்துள்ளார் வால்மீகி என்பதற்கான சான்று இது.

அதைப்போன்றே, மகாபாரதத்தில், "அர்ஜுனன் பாரத நாட்டைச் சுற்றி வருகிறான். அப்போது பாண்டிய நாட்டுக்கும் வருகிறான். அங்குள்ள குளங்களில் நீராடுகிறான். கோயில்களில் வணங்குகிறான்'' என்று தமிழ்நாட்டைப் பற்றி உயர்வாகக் குறிப்பிடுகிறார் வியாசர்.

இக்குறிப்புகள், தமிழ் மொழியின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றன. இவை மாத்திரமல்ல, மிகப் பழைய காலத்தில் குமரிக்கண்டம் என்ற நாடு இருந்தது. அதற்கு 'லெமூரியாக் கண்டம்' என்ற பெயரும் இருந்தது. அது இந்திய நாட்டுக்குத் தெற்கில் இருந்தது. அந்நாடு அழிந்துவிட்டதால், அந்நாட்டில் இருந்த மக்கள் பல இடங்களுக்குச் சென்றனர். அந்த நாட்டு மக்கள் பேசிய மொழி தமிழ் மொழி என்று புவியியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

அதாவது அறிவியல் அடிப்படையிலும் இலக்கிய அடிப்படையிலும் தமிழ் மொழியின் தொன்மை நமக்குத் தெரிய வருகிறது. தமிழ் மொழி தனித்த மொழி என்பது அதன் மற்றுமொரு சிறப்பு. தமிழ்மொழி வாழ வளர மற்றொரு மொழியின் துணை தேவையில்லை. ஆனால், பல மொழிகள் வாழ தமிழ்மொழி உதவியாக இருந்திருக்கிறது.

மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு ஆகிய திராவிட மொழிக்குடும்பத்தின் தாயாகத் தமிழே திகழ்கிறது. ஆகவேதான், மொழியியல் அறிஞர்கள் உலகில் உள்ள செம்மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்று அறிவித்துள்ளனர்.

செம்மொழி என்பதற்கான அடிப்படைத் தகுதி திருத்தமான மொழி, தெளிவான எழுத்து வடிவம். எழுத்து வடிவத்திற்கு ஏற்ற ஒலிப்பு முறை, எழுத்து வடிவத்திற்கும் ஒலிப்பு முறைக்கும் ஏற்ற பொருள் முடிவு. இவற்றைப் பெற்ற மொழியே திருத்தமான மொழி எனப்படும். தமிழ்மொழிக்கு தெளிவான எழுத்து வடிவம், ஒலிப்புமுறை, பொருள் முடிவு ஆகியன இயல்பாகவே அமையப் பெற்றிருக்கின்றன. ஆகவேதான், தமிழ்மொழி செம்மொழித் தகுதியைப் பெற்றிருக்கிறது.

உலகம் வளர்ந்து வருகிறது, மக்களும் வளர்ந்து வருகின்றனர். இவ்வளர்ச்சிக்கு ஏற்ப மொழியும் ஈடுகொடுத்து வளர வேண்டும். அப்படி நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப வளரும் மொழியே செம்மொழி எனப்படும். தமிழ் மொழி உலக மக்களின் வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ந்து வருகிறது. ஆகவேதான், புதிய புதிய சொற்கள், புதிய புதிய இலக்கியங்கள், இலக்கணங்கள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

வளர்ந்து வரும் செம்மொழியாகவும் வாழ்ந்து வரும் செம்மொழியாகவும் பழைமைக்குப் பழைமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குவது நமது தமிழ்மொழி ஒன்றே.

உலகில் இருக்கும் மொழிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 8,000 என்று மொழியியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். இவற்றில் சில மொழிகளே எழுதவும் பேசவும் பயன்படுகின்றன. மேலும், வரி வடிவத்தில் எழுதக் கூடிய மொழிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. இவற்றில் ஏழு மொழிகள்தான் செம்மொழி தகுதி படைத்தவை. அவற்றில் நம் தமிழ்மொழியும் ஒன்று.

எழுத்தளவிலும் பேச்சளவிலும் தொன்மை காத்து செம்மையோடும் சிறப்போடும் சீரோடும் நமது ஊனிலும் உதிரத்திலும் கலந்துவிட்ட மொழிதான் தமிழ்மொழி. தமிழ் மொழி, தொன்மை, எளிமை, இளமை, வளமை, செம்மை, இனிமை, பெருமை எனப் பலவகை சிறப்புகள் ஒருங்கே அமையப்பெற்றது என்று மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் வியந்து போற்றுகிறார்.

ஆகவேதான் மகாகவி பாரதியார், "தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்'' என்று கூறினார். "தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்று பாவேந்தர் பாரதிதாசன் உரக்கச் சொன்னார்.

அறிவியல் அடிப்படையில் கூட, தமிழ்மொழி பேசுவதற்கு எளிமையாக அமைந்திருப்பதால், அம்மொழியை உச்சரிக்கும் போது சுவாசப்பையில் இருந்து குறைந்த காற்றே வெளியேறுகிறதாம். பிற மொழிகளைப் பேசும்போது, நம் சுவாசப்பையிலிருந்து அதிகக் காற்று வெளியேறுகிறதாம். அதிகமான காற்று வெளியேறிச் செல்வதால் உடல் உறுப்புகளுக்குத் தேய்மானம் ஏற்படக்கூடுமென மொழியியலாளர்கள் கூறுகின்றனர்.

உலக மொழிகளில் பல வற்றுக்கு எழுத்து, சொல், யாப்பு, அணி உண்டு. ஆனால், தமிழ் மொழியில் மட்டும்தான் பொருளுக்கு இலக்கணம் உண்டு. ஆகவேதான், தமிழை ஐந்திலக்கணம் என்றனர்.

பொருளிலக்கணம் பிறந்த முறையை 'இறையனார் அகப்பொருள்' என்னும் நூல் வழி அறியலாம். மேலும், அகத்திணை ஏழும் புறத்திணை ஏழும் பகுத்துத் தந்தது தமிழ். வீரத்தைப் பறைசாற்றும் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் மனதை நெகிழ வைக்கும் தேவாரம், திருவாசகம், தொல்காப்பியம் தொடங்கி பன்னூறு இலக்கண இலக்கிய நூல்கள் தமிழுக்கு வளம் சேர்த்திருக்கின்றன.

பெரும்பாலான வட இந்திய மொழிகளில் க,ச,ட,த,ப என்னும் ஐந்து வகைகளில் ஒவ்வொரு ஒலிக்கும் நான்கு நான்கு எழுத்துகள் இருக்கின்றன. ஆனால், தமிழில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எழுத்துதான். ஒலி வேறுபட்டபோதும் எழுத்து ஒன்றுதான். அதிக எழுத்துகளை நினைவில் வைத்துக் கொள்ளத் தேவையில்லை என்பதால், தமிழைக் கற்பது மிக மிக எளிதான ஒன்றாகும்.

பிறமொழிக் கலப்பில்லாத தூய தமிழில் பேசும் முறை முற்றிலும் அழிந்து விட்டதா என்று கேட்டால், ஆம் என்றும் கூறலாம், இல்லை என்றும் கூறலாம். செந்தமிழ் நாட்டின் தென் மாவட்ட கிராமங்களில் நல்ல தமிழ் இன்னும் பேசுகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். கொங்கு தமிழ் பேசும் மக்களும் ஜவ்வாது மலைப்பகுதியில் வாழும் மக்களும் ஆங்கிலக் கலப்பில்லாமல்தான் இன்றும் பேசுகிறார்கள்.

நம்மில் பலர் கொஞ்சம் படித்து விட்டால், ஊரை விட்டே போய்விடுகிறார்கள். நிறைய படித்து விட்டால், நாட்டைவிட்டே போய்விடுகிறார்கள். படித்த தமிழர்கள் பேசும் பேச்சில்தான் ஆங்கிலச் சொற்களின் கலப்பு அதிகமாக இருக்கிறது. இது தவிர்க்க முடியாததாகி விட்டது என்று ஒரு சாரார் சொல்கிறார்கள்.


பலர் ஆங்கிலம் பேசுவதை கௌரவமாக நினைக்கிறார்கள். ஆங்கிலம் பேசத் தெரிந்ததால்தான் மென்பொருள் துறையில், நகர்ப்புறங்களில், தொழிற்சாலைகளில் வேலையே கிடைக்கிறது. ஆங்கில வழிக் கல்வியிலும் இரண்டாம் பாடமாக தமிழை விடுத்து ஹிந்தி, பிரெஞ்சு, சம்ஸ்கிருதம் பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகமாகி விட்டது.

தமிழர்கள் ஆங்கிலம் மட்டுமல்ல, எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். அவசியம் ஏற்பட்டால் அந்தந்த மொழிகளில் பேசலாம்.

ஆனால், பொது இடங்களில், ஊடகங்களில் தமிழில்தான் பேச வேண்டும் என்பதை கட்டாயமாக்க வேண்டும். இலங்கைத் தமிழர்கள் இன்றும் தூய தமிழில்தான் பேசுகிறார்கள். நாமும் தூய தமிழ் பேசுவோம். தமிழகத்தில் தமிழர்களே தமிழ் பேசுவதில்லை என்னும் வசையை மாற்றுவோம். தாய்மொழியாம் நம் தமிழ் மொழியைப் போற்றுவோம்.

**முனைவர் வைகைச்செல்வன்**

## தவக்கால சிந்தனை



### பேரழிவை உண்டாக்கும் பேராசை

பன்னிரு சீடர்களில் ஒருவராகிய யூதாஸ் இஸ்காரியோத்து எதற்காக இயேசுவைக் காட்டிக்கொடுத்தார் என்பதற்கு விவிலிய அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களைக் கூறுவார்கள்.

இயேசு விரைந்து யூதர்களை, யூத மக்களை உரோமையர்களிடமிருந்து விடுவிக்கவேண்டும் என்பதாகும். இயேசு தான் எதிர்பார்த்ததுபோன்று இல்லாமல், வேறொரு விதமாக இருந்ததால், அவரைக் காட்டிக்கொடுப்பதன் வழியாக இயேசுவை விரைந்து செயற்படச் செய்யலாம் என்று யூதாஸ் நினைத்தார். ஆனால், அவர் எதிர்பார்த்தது போன்று இயேசு நடக்கவில்லை. இறைவனின் திருவுளத்திற்கேற்ப நாம் நடக்கவேண்டுமேயொழிய, தன்னுடைய விருப்பத்திற்கேற்ப இயேசுவை நடக்க வைக்க யூதாஸ் நினைத்தது மிகவும் வியப்பாக இருக்கின்றது. யூதாஸ் எதற்கு இயேசுவைக் காட்டிக்கொடுத்தார் என்பதற்கு விவிலிய அறிஞர்கள் சொல்லக்கூடிய விளக்கம்:

யூதாஸ் பேராசைக்காரராக இருந்தார். யூதாஸ் எப்படிப்பட்டவர் என்பதை யோவான் நற்செய்தியாளர் மிக அருமையாக எடுத்துச் சொல்கிறார். அவரிடம் பணப்பை இருந்தது. அதிலிருந்து அவர் அவ்வப்போது பணத்தை எடுப்பவராக, திருடராக விளங்கினார். இப்படி அவர் பணத்தின் மீது பேராசை கொண்டவராக இருந்ததால் இயேசுவைக் காட்டிக் கொடுக்கின்றார். இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் பெற்ற தொகை முப்பது வெள்ளிக்காசுகள். அதாவது ஆறு மாத சம்பளம். முப்பது வெள்ளிக்காசுகளைப் பெற்றுக்கொண்ட யூதாஸ் நிம்மதியாக இல்லை என்பது கசப்பான உண்மை. முடிவில் தற்கொலை செய்துகொண்டு இறக்கிறார். ஆகையால், இயேசுவில் சீடர்களாக வாழும் நாம் யூதாஸைப் போன்று அல்லாமல், நமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளில் நேர்மையாகவும் உண்மையாகவும் விசுவாசமுள்ளவர்களாகவும் இருப்போம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

## இன்றைய நாளில்...

* 1575 – இந்தியாவின் முகலாயப் பேரரசர் அக்பர் வங்காளப் படைகளைத் தோற்கடித்தார்.
* 1873 – அஞ்சல் மூலம் ஆபாசமான அல்லது கவர்ச்சியான நூல்களை அனுப்புவது அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டது.
* 1923 – 'டைம்' இதழின் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.
* 1938 – சவூதி அரேபியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1939 – மும்பையில் மகாத்மா காந்தி பிரித்தானியருக்கு எதிராக உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.
* 1969 – நாசாவின் அப்பலோ-9 விண்ணில் ஏவப்பட்டது.
* 2005 – ஸ்டீவ் பொசெட் என்ற அமெரிக்கர் எரிபொருள் எதுவும் மீள நிரப்பாமல் தனியே விமானம் ஒன்றில் உலகைச் சுற்றி வலம்வந்து சாதனை படைத்தார்.

## நக்கல் நமசிவாயம்

சிறுவர் துஷ்பிரயோகம், கொலை, கொள்ளைகள் எண்டு நாட்டில நடக்கிறத பார்க்கேக்க பூமியதிர்ச்சி ஒண்டு இங்க வராமவிட்டால்தான் புதுமை பாருங்கோ..!



# கொழும்பு உள்ளிட்ட சில பகுதிகளுக்கு 24 மணித்தியால நீர்வெட்டு



கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் எதிர்வரும் சனிக்கிழமை 24 மணித்தியாலங்களுக்கு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் சனிக்கிழமை (4) பிற்பகல் 2 மணிமுதல், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (5) பிற்பகல் 2 மணிவரையான காலப்பகுதியினுள் நீர் விநியோகம் இடைநிறுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியினுள், கொழும்பு 1, 2, 3, 4, 7, 8, 9, 10 மற்றும் 11 வரையான பகுதிகளுக்கும், கடுவலை நகரம் அதனை அண்டிய பகுதிகளுக்கும் இவ்வாறு நீர் விநியோகம் தடைப்படவுள்ளது.

அத்துடன், கொலன்னாவை நகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களுக்கும், வெல்லப்பிட்டி, கொட்டிகாவத்தை பகுதிகளுக்கும் குறித்த காலப்பகுதியில் நீர் விநியோகம் தடைப்படுமென தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

மாளிகாகந்த நீரேந்து நிலையத்துக்கு நீரை விநியோகிக்கும் குழாய் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்த வேலைகளால் இவ்வாறு நீர் விநியோகம் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கும் குறித்த சபை, முடிந்தவரை தேவையான நீரை சேமித்து வைக்குமாறும் கோரியுள்ளது.

# முதலீட்டுத் தகவல்களை டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் பணிப்பு







முதலீட்டுத் தகவல்களை டிஜிட்டல் மயமாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை வழங்கினார்.

கமத்தொழில் மேம்பாட்டுச் சட்டம் மற்றும் வயல் நிலச் சட்டத்தை காலத்திற்கேற்ப மீள்திருத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அவசியமான எந்தவொரு தரப்பினரும் இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தலே இதன் நோக்கங்களாகும் என்றும் இதன்மூலம் முதலீட்டாளர்கள் புதிய முதலீட்டு வாய்ப்புகளை இலகுவாக இனங்கண்டுகொள்வதற்கான வாய்ப்பைப் பெறுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் (01) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தப் பணிப்புரைகளை ஜனாதிபதி வழங்கினார்.

முதலீட்டு ஊக்குவிப்புக்காக முன்வைக்கப் பட்டுள்ள 2023 வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிலத்தை செயற்திறனுடன் பயன்படுத்துவது தொடர்பான 2023 வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்காக இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த்து.

ஒவ்வொரு அரச நிறுவனங்களாலும் திணைக்களங்களாலும் பயன்படுத்தப்படாமல் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவை விரைவாகக் கண்டறிந்து அடையாளம் காணப்பட்ட காணிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தரவு வங்கியொன்றை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அடையாளம் காணப்பட்ட காணிகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு பொருளாதார ரீதியாக பயனுள்ள முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறும் இது தொடர்பில் தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கு குழுவொன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்தார்.

கமத்தொழில் மேம்பாட்டுச் சட்டம் மற்றும் வயல் நிலச் சட்டத்தை காலத்திற்கேற்ப மீள்திருத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அதன்படி பயிரிடக்கூடிய வயல்நிலங்களில் மீண்டும் பயிரிடவும் ஏனைய வயல் நிலங்களில் ஏனைய பயிர்களை விளைவிக்கக்கூடிய வகையில் அது தொடர்பான சட்டங்களை திருத்தியமைக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் மூலோபாய விவகாரங்களுக்கான சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜேவர்தன ஆகியோருடன் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# தமிழக படகுகளின் பராமரிப்புச் செலவுக்கென 4 இலட்சத்து 79 ஆயிரத்து 500 ரூபா அறவீடு

இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக கடற்றொழிலார்களின் படகுகளை மீள கையளிக்கும்போது, அவற்றின் பராமரிப்புச் செலவுக்கான பணமாக 4 இலட்சத்து 79 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் (01) புதன்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போது மன்றில் பிரசன்னமாகி இருந்த நான்கு உரிமையாளர்களின் படகுகளை உரிமையாளர்களிடம் கையளிக்க மன்று உத்தரவிட்டது.

அதன்போது, இலங்கை கடற்பரப்பில் இதுவரைகாலமும் நிறுத்திவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டமைக்கான இரண்டு படகுகளுக்கு தலா ஒரு இலட்சத்து 48 ஆயிரம் ரூபாவும், மற்றுமொரு படகுக்கு ஒரு இலட்சத்து 29 ஆயிரம் ரூபாவும், மற்றைய படகுக்கு 54 ஆயிரத்து 500 ரூபாவும் பராமரிப்புச் செலவாக செலுத்தவேண்டும் என மன்று கட்டளையிட்டுள்ளது.

அதேவேளை, மன்றின் கட்டளை தொடர்பில் வழக்குத் தொடுநர் தரப்பினருக்கோ, எதிராளி களுக்கோ ஆட்சேபணை இருப்பின் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டை செய்துகொள்ள முடியுமென மன்று பரிந்துரைத்தது. அத்துடன், மேன்முறையீட்டு காலம் வரையில் படகுகள் விடுவிக்கப்படாது, தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எனவும் குறிப்பிட்டது.

நேற்றைய வழக்கு விசாரணைகளின்போது தமிழக கடற்றொழிலாளர்களின் 8 படகுகள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக கடற்றொழிலாளர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளே அரசுடைமை யாக்கப்பட்டுள்ளன.

# கார்ட்போட் அட்டை இயந்திரத்தில் சிக்கிய இளைஞரொருவர் உயிரிழப்பு

வெயங்கொட முத்தரகம பகுதியிலுள்ள கார்ட்போட் அட்டை தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் குறித்த தொழிற்சாலையிலுள்ள இயந்திரத்தில் தலை சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக வெயாங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெதகம்பிட்டிய நாபலன வீதியைச் சேர்ந்த 25 வயதான காவிந்த ரகுல் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இயந்திரத்தை இயக்கி பணியாற்றிக் கொண்டிருந்தபோது இயந்திரத்தின் கதவு பகுதியில் இளைஞரின் தலை சிக்கி படுகாயமடைந்த நிலையில், அவரை அருகிலிருந்தவர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெயாங்கொட பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் பிரதித் தூதுவர் - சபாநாயகர் சந்திப்பு





இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் பிரதித் தூதுவர் லார்ஸ் பிரெடல் மற்றும் டான் கிரின்விக்ஸ் ஆகியோர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்தில் சந்தித்தனர்.

பாராளுமன்ற பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் புதிய கட்டம் பற்றி பிரதித் தூதுவர் விரிவாகக் கூறியதுடன் சபாநாயகருக்கு இத்திட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

மேலும், இலங்கையின் அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் பரஸ்பர அக்கறையுள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் பிரதித் தூதுவர் மற்றும் சபாநாயகருக்கிடையில் சுமுகமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

# டயனா கமகேவின் வழக்கு விசாரணை மறு அறிவித்தல்வரை ஒத்திவைப்பு



இராஜாங்க அமைச்சர் டயனா கமகே குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறியதாகக் கூறப்படும் வழக்கு விசாரணை மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறியதாகக் கூறப்படும் வழக்கில், நேற்று (02) நீதிமன்றத்தில், மனுதாரர் மற்றும் பிரதிவாதி சட்டத்தரணிகளுக்கு இடையில் காரசாரமான கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

டயனா கமகேவின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த ஜனாதிபதி சட்டத்தரணி சவீந்திர பெர்னாண்டோ மற்றும் மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க உள்ளிட்ட சட்டத்தரணிகளுக்கு இடையில் காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த வழக்கு இன்று நீதிமன்றில் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதே இந்த நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து, வழக்கை மறு அறிவித்தல்வரை ஒத்திவைப்பதாக கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டார்.

சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத், கையூட்டல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததை அடுத்து, குடியுரிமை தொடர்பான குற்றச்சாட்டுகள் காரணமாக இராஜாங்க அமைச்சர் தற்போது தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் அபாயத்தில் உள்ளார்.

இராஜாங்க அமைச்சருக்கு பிரித்தானிய குடியுரிமை உள்ளமையால், இராஜதந்திர கடவுச்சீட்டை அவருக்கு வழங்குவது குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்திற்கு எதிரானது என சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டை கட்டுப்படுத்த தொண்டரணி உருவாக்கத் தீர்மானம்



சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் தொண்டர் அணி ஒன்றை உருவாக்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாயத்த கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

அதன்போதே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்தோடு போதைப்பொருள் பாவனைப் பரவலைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பலப்படுத்தி பிரதேச ரீதியாக நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக் கப்பட்டது.

அதேவேளை, கச்சதீவு அந்தோனியார் தேவாலய உற்சவத்திற்கான ஏற்பாடுகள் மற்றும் பக்தர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கூட்டத்தில் யாழ். மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன், மேலதிக செயலர்களான ம.பிரதீபன், எஸ்.முரளிதரன்(காணி), திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படையினர் கலந்துகொண்டனர்.

# கொரோனாவுக்குப் பின்னர் முதலாவது சீன சுற்றுலாப் பயணிகள் குழு இலங்கை வருகை




கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர் முதல் தடவையாக சீன சுற்றுலாப் பயணிகள் சிலரை ஏற்றிய ஸ்ரீலங்கன் விமான சேவையின் விமானமொன்று நேற்று முன்தினம் (01) கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த சுற்றுலாப் பயணிகள் சீனாவின் Quanzhou நகரிலிருந்து நாட்டை வந்தடைந்துள்ளனர்.

குறித்த சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்காக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட தரப்பினர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றிருந்தனர்.

# ‘ஆளுமையின் அடையாளம்’ நூல் வெளியீட்டு விழா

எழுத்தாளர் ரவூப்டீன் எழுதிய ‘ஆளுமையின் அடையாளம்’ என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வரக்காப்பொல பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியில் ஓய்வுபெற்ற காதி நீதிபதி எம்.எம்.எம்.ஆமிர் தலைமையில் இடம்பெறும்.

சுவடுகள் பதிப்பகம் வெளியிடவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகரும் டவர் நிதியப் பணிப்பாளர் சபை உறுப்பினரும் புரவலர் புத்தகப் பூங்கா ஸ்தாபகருமான புரவலர் ஹாஷிம் உமர், சிறப்பு அதிதியாக மனித வள அபிவிருத்தி ஸ்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பீ.பீ.சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## 02.03.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 118 7175 | 131 625 |
| கனேடியன் டொலர் | 14 0021 | 152 2815 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 37 8884 | 41 1 8 |
| யூரோ | 253 7482 | 270 185 |
| ஜப்பான் யென் | 1 40 0 | 1 52 6 |
| சிங்கப்பூர் டொலர் | 143 2830 | 155 427 |
| ஸ்ரேலிங் பவுன் | 300 0024 | 318 2158 |
| சுவிஸ் பிராங்க் | 250 52 6 | 27 7118 |
| ஐ.அ.டொலர் | 232 8608 | 245 6282 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 827 018 |
| குவைட் | குவைட் தினார் | 0,041 2 51 |
| ஓமான் | ஓமான் றியால் | 807 4238 |
| கட்டார் | கட்டார் றியால் | 85 72 5 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 83 134 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 85 1711 |

## தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — புதன்கிழமை 2023.03.01 — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5046 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 42,395,066.00
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 0 2 8 5 4 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3288 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,050,970.80
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 06 27 42 69

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1501 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,124,614.00
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 2 0 9 1 8 9

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1076 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,867,606.80
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 35 44 51 76

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 355 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,689,982.40
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 13 31 45 58 — விசேட இலக்கினம் மேஷம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1394 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 304,087,706.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 05 — வெற்றி இலக்கங்கள் 11 51 62 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# யாழ். மாநகர சபை குழப்பங்களை திசை திருப்பவே எம் மீது வீண் பழி சுமத்தினார்கள்

## யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத் தலைவர் விக்னேஷ் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாநகர சபை குழப்பங்கள் செய்திகளாக வெளிவரத் தொடங்கியதும், அதனை திசை திருப்பவே வர்த்தகக் கண்காட்சி நடத்துபவர்கள் வரி செலுத்தவில்லையென எம் மீது அபாண்டமான பழியை சுமத்தியுள்ளனர் - என யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத் தலைவர் கு. விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் (01) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டவேளை ஊடக வியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடங்களில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சிகளின்போது, மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தவில்லை என சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டதாக ஊடக செய்திகள் மூலம் அறிந்துகொண்டோம்.

நாம் செலுத்த வேண்டிய பணமென எமக்கு உத்தியோகபூர்வமாக 17ஆம் திகதியே அறிவித்தனர். ஆனால், 15ஆம் திகதி நாம் பணம் செலுத்தவில்லை என செய்திகள் வெளியாகியிருந்தன. எமக்கு எவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என அறிவிக்காமல் எம்மால் எவ்வாறு பணத்தைச் செலுத்த முடியும்?

கடந்த காலங்களில் ஆணையாளரின் கட்டுப்பாட்டில் மாநகர சபை இருந்த வேளைகளில் நாம் வரிச் சலுகைகளைப் பெற்றுக்கொண்டோம்.




உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே வரிச் சலுகைகளை கேட்டிருந்தோம்.

மக்களுக்காக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் கைகளுக்கு சபை சென்ற பின்னர் நாம் வரிச் சலுகைகளை கோரியபோது சபை அனுமதி பெற வேண்டும் என்றும் சபையில் அனுமதி கிடைக்கவில்லை என்றும் காலந்தாழ்த்தி பதில்களும் அளித்தனர்.

நாம் மாநகர சபைக்கு பணம் செலுத்தவில்லையென வெளியான செய்திகள் தொடர்பில் நாம் ஆராய்ந்தபோது, மாநகர சபையின் சில உறுப்பினர்கள் தமது அரசியல் சுய இலாபத்திற்காகவும், மாநகர சபையில் அண்மைக்காலமாக காணப்படும் குழப்ப நிலைமைகள் தொடர்பிலான செய்திகளை திசை திருப்பவே எம் மீது பழி சுமத்தி செய்திகளை வெளிவரச் செய்துள்ளதாக அறிந்துகொண்டோம்.

நீண்ட காலமாக நாம் மாநகர சபைக்கு பணம் செலுத்தவில்லையென எம் மீது குற்றம் சுமத்துபவர்கள் ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை. மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை நாம் கொடுக்காதிருந்தால், எம் மீது சட்ட நடவடிக்கை எடுத்திருக்கலாமே? ஏன் எடுக்கவில்லை.

வர்த்தகக் கண்காட்சியின்போது விற்கப்படும் தலா ஒவ்வொரு நுழைவுச்சீட்டுக்கும் 12 வீத வரி செலுத்துகிறோம். அது மட்டுமன்றி, காட்சிகூடத்திற்கு வரி செலுத்துகிறோம், கழிவகற்றலுக்கு பணம் செலுத்துகிறோம், கண்காட்சி வளாகத்தை சுற்றி கட்டப்படும் கொடிகள் முதற்கொண்டு சிறிய விளம்பரப் பதாகைகள் வரை அனைத்திற்கும் மாநகர சபைக்கு பணம் செலுத்தியே நாம் கண்காட்சியை நடத்துகிறோம்.

அதேவேளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரையில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் 250 கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள பெரிய நிறுவனங்கள் தொடக்கம் யாழ்ப்பாணத்திலுள்ள சிறிய தர தொழில் முயற்சியாளர் வரைக்கும் அனைவருக்கும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம்.

இம்முறை நுழைவுச்சீட்டாக 100 ரூபா அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் வருகை தந்தால் அவர்களை இலவசமாக அனுமதிக்கவுள்ளோம் - என்றார்.

# நகர்ப் பூங்காவை பூரணப்படுத்த நலன்விரும்பிகள் உதவ வேண்டும்

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நடனதேவன் வேண்டுகோள்



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகரசபையினால் நுணாவில் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்ற நகர்ப் பூங்கா பணிகளை பூரணப்படுத்த நலன்விரும்பிகள் முன்வர வேண்டும் - என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்;

சாவகச்சேரி நகரசபையின் தீர்மானத்திற்கு அமைவாக நுணாவில் பகுதியில் காணி கொள்வனவு செய்து பூங்கா அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக சுற்றுமதில் அமைக்கப்பட்டு பூங்காவிற்கான பிரதான விளையாட்டு உபகரணமும் பொருத்தப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த செயற்பாடுகளை நகரசபையின் நிதி வளத்தை மாத்திரம் பயன்படுத்தி பூரணப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே நலன் விரும்பிகள் யாரேனும் ஞாபகார்த்தமாக அல்லது குழந்தைகளின் பிறந்தநாள் அன்பளிப்பாக நகர்ப் பூங்காவில் ஏதேனும் வேலைத்திட்டங்களை பொறுப்பெடுத்து உதவிட முடியும்.

இளைய சமுதாயம் திசைமாறிச் செல்வதைத் தடுக்கவும் முதியவர்களின் தனிமையைப் போக்கிடவும் சாவகச்சேரி நகர்ப் பூங்கா பயனுள்ளதாக அமையும் – என்றார்.

## நல்லூரில் வாள்வெட்டு: பிரதான சந்தேகநபர் கைது; வாளும் மீட்பு!

சிவராத்திரி தினத்தன்று நல்லூர் பின் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய 27 வயதுடைய பிரதான சந்தேகநபர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18ஆம் திகதி மகாசிவராத்திரி தினத்தன்று அதிகாலைவேளை நல்லூர் பின் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று முன்தினம் (01) கைதுசெய்யப்பட்டுள்ளார்.



கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாளும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே மூவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# சிறப்பாக இடம்பெற்ற சர்வதேச கடற்புல் தின நிகழ்வு







(யாழ். நிருபர்)

மாணவர் மத்தியில் கடற்புல்லின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் வலிகாமம் கல்வி வலயத்தில் தரம் 10, 11இல் நீருயிரின வளத் தொழில்நுட்பவியல் பாடம் கற்கும் மாணவரிடையே கடற்புல் தொடர்பான அறிவுக் களஞ்சியப் போட்டி நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்ற மாணவருக்கு பரிசில்களும், சான்றிதழும் சர்வதேச கடற்புல் தினமாகிய நேற்று முன்தினம் (01ஆம் திகதி) வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு வலிகாமம் கல்வி வலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் வலிகாமம் கல்விவலய நிர்வாகத் துறை பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஞா.ஆதவன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார். அத்துடன், Clean Ocean Force அமைப்பின் வடமாகாண பிரதிநிதி ம.சசிகரனும், வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் ப.அருந்தவமும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வை வலிகாமம் கல்விவலயமும், Clean Ocean Force எனும் அமைப்பும் இணைந்து நடத்தியிருந்தன.

# மக்களை தவறான திசையில் வழிநடத்தும் எதிர்க்கட்சிகள்

## நாட்டுக்கு ஆபத்தாக முடியும் என்கிறார் கல்வி இராஜாங்க அமைச்சர்






அரசியல் சமூக பொருளாதார ரீதியில் நம் நாடு பாரிய சவால்களை எதிர்கொண்டிருக்கின்றது. சர்வதேச நாடுகளினதும் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் அனுசரணைகளையும் ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொள்வதற்கும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், எதிர்காலம் தொடர்பில் மக்களை சிந்திக்க விடாது தடுக்கும் சில தரப்பினர் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் என்ற பெயரில் அப்பாவி மக்களை அசௌகரியப்படுத்தி அவர்களை தவறாக வழிநடத்திக் கொண்டிருப்பது எதிர்காலத்துக்கு மிகப்பெரிய ஆபத்தாக முடியப்போகிறது. எனவே இவ்விடயத்தில் நாட்டு மக்கள் தெளிவடைய வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோக நிகழ்வானது கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த, கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஹீ ஷேன் ஹொங் ஆகியோரின் தலைமையில் கல்வி அமைச்சின் சப்புகஸ்கந்தையில் அமைந்துள்ள களஞ்சியசாலையில் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களுக்கு சீருடை விநியோகம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதிலுமுள்ள 10,146 பாடசாலைகளில் சுமார் 40 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்கென ஒரு கோடியே 26 இலட்சத்து 96 ஆயிரம் மீற்றர் சீருடை துணிகள் தயார் படுத்தி விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதில் 88 இலட்சத்து 63 ஆயிரம் மீற்றர் சீருடை துணியை சீன அரசாங்கம் வழங்கியுள்ளது. இதன் பெறுமதியானது 787.6 கோடி ரூபா ஆகும். சீன அரசாங்கமானது இலங்கையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான 70வீதம் சீருடையை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. மிகுதி 30 வீதமான சீருடைத் துணியை கல்வி அமைச்சு வழங்குகிறது. அதன் பெறுமதியானது 236.2கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் சமூக பொருளாதார ரீதியில் நம் நாடு பாரிய சவால்களை எதிர்கொண்டிருக்கின்றது. சர்வதேச நாடுகளினதும் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் அனுசரணைகளையும் ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொள்வதற்கும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், எதிர்காலம் தொடர்பில் மக்களை சிந்திக்க விடாது தடுக்கும் சில தரப்பினர் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் என்ற பெயரில் அப்பாவி மக்களை அசௌகரியப்படுத்தி அவர்களை தவறாக வழிநடத்திக் கொண்டிருப்பது எதிர்காலத்துக்கு மிகப்பெரிய ஆபத்தாக முடியும்.

அரசாங்கமானது எப்போதும் நாடு, மக்கள் மற்றும் எதிர்காலம் என்ற சிந்தனையில் செயல்படுகிறது. ஆனாலும், எதிர்த் தரப்பினரின் ஆரோக்கியமற்ற முன்னெடுப்புகள் அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முட்டுக்கட்டையாக அமைகின்றன. எதிர்க்கட்சியினரின் ஆரோக்கியமான விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை என்பதை மறுக்கவில்லை. அதேநேரம் அரசாங்கமானது தனது கடமைப் பொறுப்பிலிருந்து விலகிச் சென்று விடவில்லை என்பதையும் இங்கு கூறி வைக்க வேண்டும்.

தற்போது நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாரிய கஷ்டங்களையும் இடையூறுகளையும் அனுபவித்து வருகின்றனர். இத்தகைய இடையூறுகளையும் கஷ்டங்களையும் களைவதற்கு பொருளாதாரத்தின் தன்மையை சீரமைத்து ஒருநிலைப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது. யார் எதனைக் கூறினாலும் நம் நாட்டின் பொருளாதாரம் சீரமைக்கப்படும் பட்சத்திலேயே மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட இலவச சேவைகளையும் ஏனைய கட்டண சேவைகளையும் செம்மைப்படுத்த முடியும். அதேபோன்று அபிவிருத்திகளையும் எதிர்பார்க்க முடியும்.


அரசாங்கம் இவ்வாறு சிந்தித்து செயல்படுகின்ற இத் தருணத்தில் நாட்டை தொடர்ச்சியாக கொதிநிலையில் வைத்திருப்பதற்கு எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டி செயல்பட்டால் நாடு பாரிய ஆபத்தையே எதிர்கொள்ளும்.

நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தினதும் நிலை உணர்ந்து எதிர்க்கட்சிகள் தங்களது நிலைப்பாடுகளை பரிசீலனை செய்ய வேண்டும்.

நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும் என்பதையே அரசாங்கம் விரும்புகிறது - என்றார்.

## நொரகல்ல தமிழ் வித்தியாலய மாணவர்கள் மூவர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

(பெல்மதுளை நிருபர்)



நிவித்திகலை கல்வி வலயத்திற்குட்பட்ட நொரகல்ல தமிழ் வித்தியாலய வரலாற்றில் முதற்தடவையாக கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்து சாதனைப் படைத்துள்ளதாக பாடசாலை அதிபர் பெருமாள் பரமசிவன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகவும் பின்தங்கிய பிரதேசத்திலுள்ள இப்பாடசாலையில் போதிய வளங்களும் போதிய ஆசிரியர்களும் இல்லாத சூழ்நிலையில் 3 மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை வரலாற்று சாதனையாகும்.

இப்பரீட்சையில் விஸ்வநாதன் டினுசன் 175 புள்ளிகளை பெற்று மாகாண மட்டத்தில் (தமிழ்மொழியில்) இரண்டாம் இடத்தையும் வலய மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்று சாதனைப் படைத்துள்ளார்.

அதேபோன்று விஸ்ணுகுமார் அக்ஸயா 147 புள்ளிகளையும் நவரத்தினகுமார் மோக்ஸிதா 144 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர் - என்றார்.

சித்திபெற்ற மாணவர்களுடன் வகுப்பாசிரியை பி.ஹரணியையும் அதிபர் பெருமாள் பரமசிவன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# பறை இசைக் கலைஞருக்கு இசைக் கருவி அன்பளிப்பு



தமிழர் பாரம்பரிய இசைக் கருவியான பறை இசையை பரவலாக்கம் செய்வதில் பெரும்பங்காற்றி வரும் இங்கிரிய, றைகம், மேற்பிரிவைச் சேர்ந்த பறை இசைக் கலைஞர் முருகேசு விக்னேஸ்வரனுக்கு, களுத்துறை மாவட்ட சமூக செயற்பாட்டாளர் திருமதி தனலட்சுமி மாதவன் முன்னிலையில் சிறப்பு கௌரவம் அளிக்கப்பட்டது.

ஹொரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பறை இசைக் கலைஞர் முருகேசு விக்னேஷ்வரனின் பறை இசைக் குழுவின் வளர்ச்சிக்காக தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் சமூக ஆர்வலர் சின்னப்பன் பரமேஸ்வரனால் பறை இசைக் கருவி அன்பளிப்பு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில், ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தன் உள்ளிட்ட கலை இசை ஆர்வலர்கள் சிலரும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

# மாணவர்களுக்குப் பாராட்டு

உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு இன்று (03) காலை 8.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எம்.அஸ்லம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் பாடசாலைகளின் பிரதி கல்விப் பணிப்பாளர் ஏ.உனைஸ்,

0மற்றும் அதிதிகளாக வைத்தியர் எப்.பயி ரோசா உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதாக மோசடி லாவோஸில் பலர் சிக்கியுள்ளதாக 15 முறைப்பாடுகள்

தென்கிழக்காசிய நாடான லாவோஸில் வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதாகக் கூறி, மேற்கொள்ளப்பட்ட இலங்கையர்களுக்கு எதிரான மனிதக் கடத்தல் சம்பவங்கள் குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு நேற்று முன்தினம் (1) வரை 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தாய்லாந்தில் வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதாக பொய்யான உத்தரவாதத்தின் பேரில் இலங்கை இளைஞர்கள் பலர் லாவோஸில் சிக்கியுள்ளமை தொடர்பில் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஏற்கனவே பணியகத்தால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அம்பலாந்தோட்டையைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர் ருவன் பத்திரன மற்றும் அவருக்கு உதவியதாகக் கூறப்படும் உள்ளூராட்சி வேட்பாளர் அனுர சேனாரத்ன ஆகியோருக்கு எதிராகவே இந்த முறைப்பாடுகள் அனைத்தும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகள் அனைத்தும் தென் மாகாணத்திலுள்ள இளைஞர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**




ஒரு சிலரைத் தவிர, எஞ்சிய இலங்கையர்கள் இன்னும் லாவோஸில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தல்காரர்கள் இதற்கு முன்னர் நான்கு இளம் பெண்களையும் இளைஞர் ஒருவரையும் முதலில் தாய்லாந்துக்கும் பின்னர் லாவோஸுக்கும் அழைத்துச் சென்றுள்ளனர்.

இதற்காக அவர்கள், சீன நிறுவனம் ஒன்றிடமிருந்து தலா 5,000 அமெரிக்க டொலர்களைப் பெற்றுள்ளனர். எனினும், இந்த இளைஞர்களின் தற்போதைய நிலை தொடர்பில் தகவல்கள் கிடைக்கவில்லை.

# விவசாயிகளுக்கு டோக்கன் முறையில் இலவச டீசல் நேற்றுமுதல் விநியோகம்

நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் அனைத்து விவசாயிகளுக்கும் சீனாவால் வழங்கப்பட்ட டீசல் நேற்று (02) முதல் எரிபொருள் டோக்கன் அடிப்படையில் இலவசமாக வழங்கப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐந்து மாவட்டங்களைத் தவிர, ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகள் எரிபொருளைப் பெறுவதை எளிதாக்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் மூலமாக உரிய டோக்கன் அட்டைகளை நேற்று முன்தினம் (01) வழங்கி முடித்துள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் விவசாய அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளின் தலைமையில் இந்த எரிபொருளை விநியோகிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (01) இடம்பெற்றது.

நாட்டில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு சீன அரசு 6.98 மில்லியன் லீற்றர் டீசலை இலவசமாக வழங்கியது.

எனினும், பல்வேறு நிர்வாகச் சிக்கல்களால் விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகிக்க தாமதமானது.

பெறப்பட்ட எரிபொருளிலிருந்து உடனடியாக விவசாயிகளுக்கு எரிபொருளை இலவசமாக விநியோகிக்க ஏற்பாடுசெய்யுமாறு அமைச்சு அதிகாரிகளுக்கும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் விவசாய அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

அரை ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கர் வரை நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு இந்த எரிபொருள் சலுகை கிடைக்கும். ஒரு ஹெக்டேயருக்கு 15 லீற்றர் டீசல் வழங்கப்படும். எரிபொருள் வழங்கப்பட்டவுடன், டோக்கன் இரத்து செய்யப்படும்.

# ‘வடக்கின் நுழைவாயில்’ சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று ஆரம்பம்




அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த சர்வதேச கண்காட்சியை 13ஆவது தடவையாகவும் கொழும்பின் பிரபல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களையும் இணைத்து யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தவுள்ளோம்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை தெற்கு தொழில் முயற்சியாளர்களுடன் இணைந்து சந்தைப்படுத்துவதற்கும் தொழில்நுட்ப ரீதியில் தொடர்புகளை வளர்த்துக்கொள்ளவும் உதவியாக இருக்கும்.

பல வருட காலமாக வடக்கின் கைத்தொழில் துறை வளர்ச்சி மற்றும் சந்தை வாய்ப்பில் இருந்த பாரிய இடைவெளிகள் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் கண்காட்சிகள் மூலம் குறைக்கப்பட்டுள்ளன.




‘வடக்கின் நுழைவாயில்’ சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. பாடசாலை சீருடையுடன் வரும் மாணவர்களுக்கு இலவச அனுமதி வழங்கப்படுகிறது.

யாழில் ‘வடக்கின் நுழைவாயில்’ எனும் தொனிப்பொருளில் 13ஆவது தடவையாக சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் குலரட்ணம் விக்னேஸ் தெரிவித்தார்.

யாழ். ரில்க்கோ விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

250 கண்காட்சிக்கூடங்கள் அமைக்கப்படவுள்ள நிலையில், கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக சுமார் 15 ஆயிரம் பேர் வந்திருக்கிறார்கள். சுமார் 45 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் பேர் வரை பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலை சீருடையுடன் வருகைதரும் மாணவர்கள் குறித்த கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# யாசகரிடமிருந்து கைக்குழந்தை கடத்தல்

**பம்பலப்பிட்டியில் சம்பவம்**

பெண் யாசகரிடமிருந்து ஒன்றரை வயது கைக்குழந்தை ஒன்றை மூவரடங்கிய குழுவொன்று அபகரித்துச் சென்றுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பெண்ணொருவரும் ஆண்கள் இருவருமே குறித்த யாசகரிடமிருந்து கைக்குழந்தையை பலவந்தமாக பிடுங்கி, முச்சக்கரவண்டியொன்றில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பெண் யாசகர் பம்பலப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பம்பலப்பிட்டியவிலுள்ள நிறுவனம் ஒன்றுக்கு முன்பாக யாசகம் கேட்டுவந்த பெண்ணிடம் இருந்த கைக்குழந்தையே இவ்வாறு அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டியில் வந்திறங்கிய மூவரடங்கிய குழு, அந்தக் குழந்தைக்கு ஆடைகளை வாங்கித் தருவதாகக் கூறி, அப்பெண்ணையும் முச்சக்கரவண்டியில் ஏற்றிக்கொண்டு தெமட்டகொடை பிரதேசத்திலுள்ள ஆடை விற்பனை நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

அங்கு முச்சக்கரவண்டிக்கான வாடகை கட்டணத்தைச் செலுத்தி முச்சக்கரவண்டியை அனுப்பிவைத்துள்ளனர்.

புடவை கடைக்குச் சென்றவர்கள் சுமார் 1,900 ரூபாவுக்கு ஆடைகளை குழந்தைக்காக கொள்வனவு செய்துள்ளனர். அதனை குழந்தைக்கு உடுத்திவிட்டதன் பின்னர். அங்கிருந்து மற்றுமொரு முச்சக்கரவண்டியில் ஏறி, கொம்பனி வீதிக்கு வந்துள்ளனர்.

அங்குள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாகவிருக்கும் வாகன தரிப்பிடத்துக்கு முச்சக்கரவண்டியை செலுத்திச்சென்றதுடன், முச்சக்கரவண்டியில் இருந்த பெண், கைக்குழந்தையை தன்னிடம் தருமாறும் தான் தூக்கிக்கொண்டு வருவதாகவும் யாசகரிடம் (பெண்) கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும், அதற்கு அந்தப் பெண் யாசகர் ஒப்புக்கொள்ளவில்லை. அப்போது அப்பெண்ணுடன் வந்திருந்த ஆண், யாசகரை தாக்கி முச்சக்கரவண்டியிலிருந்து கீழே தள்ளிவிட்டு, கைக்குழந்தையுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பில் பெண் யாசகரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்தார்.

தன்னுடைய குழந்தை இல்லாது அந்தப் பெண் யாசகர் கதறி அழுதுகொண்டிருக்கின்றார் என்றும் தெரிவித்த பொலிஸார், குழந்தையை கடத்தியவர்கள் தொடர்பில் எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் எனினும், குழந்தை பாக்கியம் இல்லாத ஜோடியே இந்தக் குழந்தையை கடத்தியிருக்கவேண்டும் என்றும் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

# 4 கிலோ கேரள கஞ்சாவுடன் சங்குப்பிட்டியில் ஒருவர் கைது



சங்குப்பிட்டி சோதனைச் சாவடியில் கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 04 கிலோ கிராம் கேரள கஞ்சா நிரப்பப்பட்ட 02 பொதிகளுடன் பஸ்ஸில் பயணித்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பூநகரி பொலிஸாரின் ஒருங்கிணைப்புடன் சங்குப்பிட்டி வீதி சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் (01) தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற பஸ்ஸில் சந்தேகநபர் 04 கிலோ கிராம் எடையுள்ள 02 கேரள கஞ்சா பொதிகளை ஏற்றிச்சென்றபோது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி 01 மில்லியன் ரூபாவாகும்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் யாழ்ப்பாணம் அனலைதீவில் வசிக்கும் 26 வயதுடையவர் என அடையாளம் காணப் பட்டுள்ளார்.

சந்தேகநபர் கேரள கஞ்சாவுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# அமைச்சர் டக்ளஸ் தலைமையில் மாவட்ட முன்னாயத்த அபிவிருத்திக் கூட்டம்





கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று (02) காலை யாழ். மாவட்ட அபிவிருத்தி முன்னாயத்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், வட மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், முப்படையினர், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# மதுபானத்துடன் சந்தேகநபர் கைது!

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேலணை 3ஆம் வட்டாரப் பகுதியில் மதுபானத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் குறித்த சந்தேகநபர் 24 கால்போத்தல்கள் சாராயம் மற்றும் 06 பியர் போத்தல்கள் ஆகியவற்றை புதருக்குள் வைத்து விற்பனை செய்தவேளை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளார்.

# அதிக விலைக்கு முட்டை விற்பனை

**உற்பத்தியாளர் சங்கத் தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை**

குருநாகல் பகுதியில் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த நான்கு கோழிப்பண்ணைகளை நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் நேற்று முன்தினம் சுற்றிவளைத்துள்ளனர்.

கொபேகனே, மிரிஹானேகம, அவுலேகம மற்றும் பிங்கிரிய பிரதேசங்களிலுள்ள கோழிப்பண்ணைகளே சோதனையிடப்பட்டன.

குறித்த கோழிப்பண்ணைகளில் முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்கவிற்கு சொந்தமான கோழிப்பண்ணை ஒன்றும் உள்ளடங்குவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஆதாரங்கள் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டு, குறித்த பண்ணைகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்.

# அராலியில் வீடொன்றுக்கு முன்னால் கைவிடப்பட்ட மோட்டார்சைக்கிள்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்கு பகுதியில் வீடொன்றுக்கு முன்னால் கைவிடப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

சாளி மோட்டார்சைக்கிள் ஒன்று அதன் பாகங்கள் கழற்றி எடுக்கப்பட்ட நிலையில், இவ்வாறு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்திற்கு அருகிலுள்ள வீட்டின் உரிமையாளர் காலை வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தவேளை, மோட்டார்சைக்கிள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.



இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது.

# ஹொரணை முன்பள்ளிக்கு கரம் கொடுக்கும் பேஸ் அமைப்பு!









சிறுவர் கல்வி மேம்பாட்டு அமைப்பான பேஸ் நிறுவனத்தின் கீழ் இயங்கவுள்ள ஹொரணை, மலரும் மொட்டுகள் முன்பள்ளியின் திறப்பு விழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

மலரும் மொட்டுகள் முன்பள்ளி நிலையத்தை ஹொரணை கல்வி வலயத்துக்கான ஆரம்ப கல்வி உதவிப் பணிப்பாளர் திருமதி லங்கானி பிரதீபிகா திறந்துவைத்தார்.

களுத்துறை மாவட்ட சமூக செயற்பாட்டாளர்களான கரு. கனகர், தனலட்சுமி மாதவன் ஆகியோரின் வேண்டுகோளுக்கமைவாக, பேஸ் நிறுவனத்தின் மலையகத்துக்கான ஒருங்கிணைப்பாளரும், மத்திய குழு உறுப்பினருமான லயன் வீ.கே.பாலசுப்ரமணியத்தின் பரிந்துரையில் களுத்துறை மாவட்டம், ஹொரணை தமிழ் மகா வித்தியாலய வளாகத்தில் அமைந்திருக்கும் மலரும் மொட்டுகள் முன்பள்ளியை சிறுவர் கல்வி மேம்பாட்டு அமைப்பான பேஸ் நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது.

நாடு முழுவதும் 64 முன்பள்ளிகள் பேஸ் நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் நிலையில், ஹொரணை முன்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான உதவி கொடுப்பனவு, மற்றும் பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு, மாணவர்களுக்கான சீருடை மற்றும் முன்பள்ளிக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் அனைத்தையும் மாதந்தோறும் பேஸ் நிறுவனம் வழங்கவுள்ளது.

இந்த முன்பள்ளி திறப்பு விழா நிகழ்வு ஹொரணை, தமிழ் மகா வித்தியாலய அதிபர் திருமதி டீ.சி.ஜீவயோகினியின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

**புற்றுநோயாளர்கள் இருவரின் வங்கிக் கணக்கிலிருந்து**

# 3 இலட்ச ரூபா பணத்தை மோசடிசெய்தவர் கைது

புற்றுநோயாளிகள் இருவரின் வங்கிக் கணக்கிலிருந்து 3 இலட்ச ரூபா பணத்தை ஏமாற்றி மோசடி செய்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த அப்துல் எலீம் வசிமுல்லா என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு ஹொரணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

புற்றுநோய் சிகிச்சைக்கு உதவி கோரி பத்திரிகையில் வெளியான விளம்பரத்தின்படி, புற்று நோயாளிகள் இருவரின் வங்கிக் கணக்குகளிலிருந்து பணத்தை மோசடி செய்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இரண்டு புற்றுநோயாளிகளுக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு மற்றும் ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக வழங்குமாறும் சந்தேக நபருக்கு ஹொரணை நீதவான் சந்தன கலன்சூரிய நேற்று முன்தினம் (01) உத்தரவிட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சமூக ஊடகப் பிரிவு குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்துள்ளது.

# அரசசார்பற்ற நிறுவன சம்மேளனத்தின் தலைவராக ரவிச்சந்திரன் மீண்டும் தெரிவு



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் புதன்கிழமை (01) நடைபெற்றது.

ஐந்து வருடங்களுக்கு முன் இச்சம்மேளனம் அரசசார்பற்ற நிறுனங்களின் தேசிய தலைமையகத்தில் பதிவுசெய்யப்பட்டு இயங்கி வந்தது. ஆயினும் நிதி அனுசரணை பெறுவதில் பல தடைகள் ஏற்பட்டிருந்தன. அவற்றை தவிர்க்கும் முகமாக மாவட்ட மட்டத்தில் பதிவுசெய்யும் நோக்குடன் ஜனவரி மாதம் சம்மேளனத்தின் யாப்பினைத் திருத்தி சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக திருகோணமலை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் சம்மேளனத்தின் தலைவராக டாக்டர் ரவிச்சந்திரன் இருந்து வந்துள்ளார். ஆயினும், அவர் தன்னுடைய முயற்சியாலும் சக அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினாலும் யாப்புத் திருத்தத்தினை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளார். இதன் பின்னணியில் மீண்டும் அவரே 2023/2025 காலப்பகுதியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக தலைவர் என்.ரவிச்சந்திரன் (ஹார்ட் சிலோன் பவுண்டேஷன்) உப தலைவர் பொ.சற்சிவானந்தன் (திருமலை அகம்) செயலாளர் ஏ.ஆர்.எம். தஸ்லீம் (லீட்ஸ்) உப செயலாளர் திருமதி சத்துராணி மல்லவாராச்சி (ஷக்தி மகளிர்) பொருளாளர் அ.கஜேந்திரன் (ஸ்ட்ரீட் சைல்ட் லங்கா) நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக ஆர்.அரியரெட்ணம் (சிறுவர் அபிவிருத்தி நிதியம்), ஏ.எம்.எம்.பரீட் (பெடோ), எம்.டீ.எம்.பாரிஸ் (PSC), திருமதி பீ.கே.ஏ.நிரோஷா (ECRDF), திருமதி எம்.நூறுல் இஸ்மியா (3CD), திருமதி ரா.பத்மினி (சர்வோதயா), டீ.சலீம் (முஸ்லிம் எய்ட்), திருமதி ரா.நளினி (WSEC), எம்.எச்.லபீப் (அல்-வபா பவுண்டேஷன்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை சமூக சேவை உத்தியோகத்தர் ஹபிபுல்லா, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் பிரணவன் மற்றும் சர்வோதய தேசிய உப தலைவர் வே.ஜீவராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற முப்பெரும் விழா










(பொலிவேரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் (GMMS) ஏற்பாட்டில் முப்பெரும் விழா சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் சனிக்கிழமை (25) இடம்பெற்றது.

பாடசாலையின் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில், பாரம்பரியக் கலையான பொல்லடி எனும் கோலாட்டக் குழுவினரால் அதிதிகள் அழைத்துவரப்பட்டு, 2022ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவம், பாடசாலைக்கான இணையத்தள அங்குரார்ப்பணம், ஆங்கில (Rainbow) சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு என முப்பெரும் விழாவாக பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்லியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், மாகாண கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் ஏ.எம்.எம்.ரபீக் ஆகியோரும் கல்முனை வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ.மலிக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.சஹரூன், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.ஆர்.முஹம்மட் நிஸ்ஸாட் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், பாடசாலைக்குரிய இணைய தளத்தை இலவசமாக உருவாக்கித்தந்த பாடசாலையின் பழைய மாணவர்களில் ஒருவரும் பிகாஸ் கல்வி நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.ஆர்.முஹம்மட் நிஸ்ஸாட் பிரதம அதிதியினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது, புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் சான்றுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் பதக்கம் அணிவித்து நினைவுச்சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு காரண கர்த்தாக்களாக இருந்த வகுப்பாசிரியர்களும் பகுதித் தலைவர் எம்.ஏ.சி.எல்.நஜீம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ் உட்பட அதன் உறுப்பினர்களான எம்.சீ.எம். ஹஸீர், எஸ்.ஐ.அஸ்மீர், ஏ.ஜலீல் ஆகியோரும் பாடசாலைக்கு வழங்கப்பட்டுவருகின்ற மகத்தான சேவையையும் அர்ப்பணிப்பையும் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக் கப்பட்டதோடு, அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ், பிரதி அதிபர், உதவி அதிபர் உட்பட ஆசிரியர்கள் அனைவரும் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்வில் அரங்கேறி பார்வையாளர்களை மேலும் பரவசப்படுத்தின.

# நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் நாம் செயற்பட வேண்டும்

## முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை



(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து கட்சி வேறுபாடுகளுக்கப்பால் செயற்பட வேண்டிய தேவை உள்ளது. இத்தருணத்தில் அரசியல் நோக்கங்களுக்காக பிரதேசவாதங்களைப் பேசி நாம் பிரிந்துவிடக்கூடாது - என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை 1ஆம் பிரிவிற்கான இளைஞர் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் புதன்கிழமை (01) நடைபெற்றது. அதன்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மறைந்த பெருந்தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபுடன் இணைந்து அர்ப்பணிப்போடு செயல்பட்ட மூத்த முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரீ.ஹஸன் அலியை முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரித்தெடுத்து முதலாவது தடவையாக நிந்தவூரில் நடைபெற்ற கூட்டத்தில் ஊர்வலமாக தூக்கி வந்து மேடையில் வைத்து எங்களின் உயிர் பிரியும் வரை ஹசன் அலியோடுதான் அரசியல் செய்வோம் என்று மக்கள் மத்தியில் பகிரங்கமாக சொன்னவர்கள் தற்போது அவர்களை நட்டாற்றில் விட்டுவிட்டு எங்களுக்கு பதவி ஆசை இல்லை எனக் கூறுவது வேடிக்கையாக உள்ளது.

மேலும், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஆட்சி அதிகாரங்களை தேசிய காங்கிரஸ் பெறுவதற்கான சூழ்நிலை இலகுவாக இருந்தும் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்சில் எப்படியும் இந்த தவிசாளர் பதவிக்கு தான் வர வேண்டும் என்ற நிலைமையின் காரணமாக அன்று தேசிய காங்கிரஸ் கட்சிக்கு கிடைக்கவேண்டிய தவிசாளர் பதவி இல்லாமல்போனது. எல்லாவற்றையும் செய்து விட்டு இவர் தற்போது விளக்கம் தெரிவிக்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்தபோது இந்தியாவிடம் சென்று 13இற்கு மேலதிகமாக அரசியல் தீர்வு வழங்குவேன் என்று வாக்குறுதியளித்தார். இறுதியில் இதனை வழங்காமல் தனது பதவியிலிருந்து சென்றுவிட்டார். தற்போது 13ஆவது சரத்தை அமுல்படுத்த வேண்டிய தேவையில்லை எனக் கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்றும் கேள்வி எழுப்பினார்.



ஓட்டமாவடி யங் சோல்ஜஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை 4ஆம் திகதி நடைபெறவுள்ள Tournament soldiers league super six கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்குடா தொகுதி அமைப்பாளரும் உயர்பீட உறுப்பினரும், இளைஞர் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளருமான சட்டத்தரணி ஹபீப் றிபான் நிதியுதவி வழங்கியுள்ளார். இந்நிதியை கழகத்தின் தலைவர் பர்ஷான் மற்றும் பொருளாளர் ரம்ஸான் ஆகியோர் சட்டத்தரணி ஹபீப் றிபானிடமிருந்து பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் கபூர், கழகத்தின் நிர்வாகிகள் உள்ளிட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக நேசராஜா நியமனம்



(வெல்லாவெளி, மட்டக்களப்பு செய்தியாளர்கள்)

கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக (நிதி) இலங்கை கணக்காளர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த எஸ்.நேசராஜா, ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத்தால் வியாழக்கிழமை (02) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை கிழக்கு மாகாண திறைசேரியில் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக (நிதி) கடமையாற்றிய, இலங்கை கணக்காளர் சேவை விசேட தரத்தைச் சேர்ந்த எஸ்.குலதீபன் ஓய்வுபெற்றதையடுத்து அவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

31 வருட கணக்காளர் சேவை அனுபவம்கொண்ட இலங்கை கணக்காளர் சேவை தரம் 1ஐச் சேர்ந்த இவர், களுதாவளை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழக வியாபாரமாணி பட்டதாரியுமாவார்.



மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "சிறு சந்தை மினி பெயார்" எனும் தொனிப்பொருளில் செயலக வளாகத்தில் உதவிப் பிரதேச செயலாளர் சுபா சதாகரன் தலைமையில் வியாழக்கிழமை (02) நடைபெற்றது. இந்நிகழ்வு மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(மட்டக்களப்பு)

# சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு ரூபா 5 இலட்சம் நிதி அன்பளிப்பு





(பொலிவேரியன் செய்தியாளர்)

மட்டுப்படுத்தப்பட்ட கல்முனை தெற்கு கைத்தொழில் ஊக்குவிப்பு வர்த்தக கூட்டுறவுச் சங்கத்தினால் ரூபா 5 இலட்சம் சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு புதன்கிழமை (01) இரவு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

பள்ளிவாசலில் இடம்பெற்றுவரும் புதிய அபிவிருத்தி வேலைகளின் நிர்மாணப் பணிகளுக்கு சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீமின் வேண்டுகோளுக்கிணங்க, இந்தத் தொகையை மரைக்காயர் சபை கூட்டத்தின்போது பள்ளிவாசலின் செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூரிடம் கையளித்தனர்.

இதன்போது அச்சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான சங்கத்தின் தலைவரும் ஷபாஷ் என்ட் அசோசியேட்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளருமான எம்.சி.எம்.ஹசீர், செயலாளரும் ரெட் சிலி ஹோட்டல் உரிமையாளருமான எம்.எம்.ஏ.ரஹீம், முன்னாள் தலைவரும் ட்ரிபிள் பைவ் ஹோம் பேர்னிச்சர் உரிமையாளருமான எம்.ஏ.சி.எம்.இக்பால், பொருளாளரும் ஸ்டார் பலஸ் உரிமையாளருமான பி.எம்.எம்.ஹசீம், சிரேஷ்ட தலைவரும் ஒலுவில் கிறீன் வில்லா ஹோட்டல் உரிமையாளருமான ஏ.ஹிபத்துல் கரீம், நளீம் ஸ்டோர் உரிமையாளர் ஏ.எச்.எம்.ஹாரூன், அல்-தாபீத் ஜுவல்லரி உரிமையாளர் எம்.எம்.அலி, பிரதித் தலைவரும் ஜெமீல் பேர்னிச்சர் ஷோரூம் உரிமையாளருமான ஏ.அப்துல் கபூர், மைக்ரோ ஹார்ட்வெயார் பணிப்பாளர் ஏ.உதுமான் லெப்பை, பிரதித் தலைவரும் ரெயின்கோ பிரைவேட் லிமிடெட்டின் பணிப்பாளருமான எம்.எம்.ஏ.அஸீஸ், மல்டி குயீன்ஸ் ட்ரேடர் உரிமை யாளர் எம்.ஐ.எம்.பழீல் ஆகியோர் இணைந்து இந்தத் தொகையை வழங்கியுள்ளனர்.

இந்த முன்மாதிரியான செயற்பாட்டைச் செய்த இச்சங்கத்தின் தலைவர் உட்பட அதன் பணிப் பாளர் சபை உறுப்பினர்களுக்கு சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம் உட்பட செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூர், பொருளாளர் ஏ.ஏ.சலீம், பிரதி செயலாளர் எம்.ஐ.நிபாயிஸ் மற்றும் மரைக்காயர் சபை உறுப்பினர்கள் அனைவரும் தங்களது நன்றியை நேரடியாகவும் எழுத்து மூலமும் தெரிவித்துக்கொண்டதோடு, தற்போது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல்களில் அபிவிருத்தி நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருவதனால் வசதியுள்ளவர்கள், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்களால் முடியுமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டனர்.

இந்நிகழ்வில் ஏ.ஏ.மஜீட் மரைக்காயர் ரூபா 50 ஆயிரம் பணத்தை பள்ளிவாசல் அபிவிருத்தி வேலைகளுக்கு அன்பளிப்புச் செய்ததும் குறிப்பிடத்தக்கது. ஜும்ஆப் பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.சி.எம்.பாஹிர் மௌலவியினால் துஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது.



2022இல் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் வித்தியாலய மாணவி எம்.எச்.ஷபாக்கா 155 புள்ளிகளைப்பெற்று சித்தி யடைந்துள்ளார். இவர் ஆரம்பக் கல்வியாக ஆண்டு மூன்று வரை ஆங்கில மொழியில் கல்வி கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் அக்கரைப்பற்று 2ஐச் சேர்ந்த முஹம்மது ஹிஷாம் - பாத்திமா முஷர்றபா தம்பதியரின் புதல்வியாவார்.



பிரதமர் தினேஷ் குணவர்தனவின் 74ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை அல்-முனீறா பெண்கள் உயர் பாடசாலைக்கு ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கதிரைகள் வியாழக்கிழமை (02) வழங்கப்பட்டன. பாடசாலையின் அதிபர் ஏ.சீ.நியாசிடம் தளபாடங்களை அட்டாளைச்சேனை பிரதேச தேசிய காங்கிரஸ் பொருளாளரும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தருமான ஏ.ஆர்.எம்.றிப்கான் வழங்கினார். இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான சுஹைறா நௌசாத், எம்.ரீ.சியாத், ஆரம்பப் பிரிவு வலயத் தலைவர் எம்.ஐ.ஜஃபர் கலந்துகொண்டனர்.
(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

# மடிக்கணினி வழங்கிவைப்பு



(மத்திய முகாம் செய்தியாளர்)

நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதேசத்தில் உள்ள வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு நளீர் பௌண்டேசன் அமைப்பினால் மடிக்கணினி ஒன்று நேற்று (01) வழங்கப்பட்டது. நளீர் பௌண்டேசன் அமைப்பினரிடம் வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவி கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள தனக்கு மடிக்கணினி அத்தியாவசிய தேவையாக உள்ளதெனக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நளீர் பௌண்டேசன் அமைப்பினால் மடிக்கணினி மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அனைத்து பொருட்களையும் நாவிதன்வெளி பிரதேச செயலக செயலாளர் எஸ்.ரங்கநாதன் குறித்த மாணவியின் பெற்றோரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில் நளீர் பௌண்டேசன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும், இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாணப் பணிப்பாளருமான ஏ.நளீர், அமைப்பின் உபதலைவர் கே.எம்.நௌபர், மத்திய முகாம் பெரிய பள்ளிவாசல் தலைவர் எம்.சி.பயாஸ் மற்றும் பொருளாளர் எம்.எஸ்.எம்.இக்பால் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# திருக்கோவிலில் மோட்டார்சைக்கிளுடன் லொறி மோதி விபத்து: 25 வயது இளைஞன் உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

அம்பாறை, திருக்கோவில் - பொத்துவில் பிரதான வீதி தங்கவேலாயுதபுரம் சந்தியில் லொறி ஒன்றும் மோட்டார்சைக்கிள் ஒன்றும் மோதிய விபத்தில் மோட்டார்சைக்கிளை செலுத்திச்சென்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் புதன்கிழமை (01) இரவு 9 மணிக்கு இடம்பெற்றதாகவும் குறித்த லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் திருக்கோவில் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். மாணிக்கப்பிள்ளையார் வீதி விநாயகபுரம் 4ஆம் பிரிவைச் சேர்ந்த 25 வயதுடைய திருச்செல்வம் கிருஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொத்துவில் பகுதியிலிருந்து திருக்கோவிலை நோக்கிச்சென்ற லொறியும் திருக்கோவிலிலிருந்து தங்கவேலாயுதபுரம் நோக்கிச்சென்ற மோட்டார்சைக்கிளுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து, உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருதில் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் ஆரம்பம்

(நிந்தவூர் செய்தியாளர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் டெங்கு நுளம்புகள் அதிகரித்த நிலையில் விசேட நுளம்பு ஒழிப்புத் திட்டமொன்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் அண்மையில் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பிரதேச மக்கள் தங்கள் வீட்டுச்சூழல் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை சுத்தமாக வைத்திருக்குமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்ஸத் காரியப்பர் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

வீட்டு சுற்றுப்புறச் சூழலில் காணப்படும் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்களை கல்முனை மாநகர சபையின் குப்பைகள் சேகரிக்கும் வண்டிகளில் ஒப்படைக்குமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர், வீடுவீடாகச் சென்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனையில் ஈடுபடும் வேளையில் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாகவுள்ள இடங்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டத்தை மீறி அரச காணிக்குள் அத்துமீறி நுழைவது தண்டனைக்குரிய குற்றமாகும்

## மண்முனை பிரதேச செயலாளர்

(புளியந்தீவு செய்தியாளர்)

மண்முனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பட்டர்பிளை கார்டன் பிரதேசத்தில் இருக்கும் அரச காணிக்குள் அத்துமீறி நுழைந்தோரை எச்சரிக்கை செய்து வெளியேற்றியதாக மண்முனை பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தெரிவித்தார்.

அரச காணிகள் யாவும் அவை அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரின் அதிகாரத்துக் குட்பட்டவை. அப்படியிருந்தும் பட்டர்பிளை கார்டன் பகுதியில் அமைந்துள்ள அரச காணிக் குள் நேற்று வியாழக்கிழமை காலை சிலர் அத்துமீறி நுழைந்து துப்புரவு செய்வதாக எமக்குத் தகவல் கிடைத்தது.

அரச காணிக்குள் நுழைந்து அதனை துப்புரவு செய்வதற்கு முன்பதாக சம்பந்தப்பட்டவர்கள், அதற்குள் நுழைவதற்கும் அதனை துப்புரவு செய்வதற்குமான எனது அனுமதியை ஏற்கனவே பெற்றிருக்க வேண்டும். அரச காணிக்குள் நுழைவதற்கும், அதற்கு உரிமை கொண்டாடுவதற்கும் சில வழிமுறைகள் காணிகள் தொடர்பான சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன. அவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றாது அவற்றை ஒதுக்கி நடப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்தக் காணிக்குள் அத்துமீறி குடியேறிய நபர்கள் தங்களுக்கே விஷயம் விளங்கவில்லை என்று தெரிவித்து மன்னிப்பு கோரியதன் காரணமாக அவர்களை எச்சரிக்கை செய்து வெளியேற்ற வேண்டியிருந்தது - என்றார்.

# பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கல்



(பொத்துவில் செய்தியாளர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அவசரத் தேவையை நிவர்த்திசெய்யும் பொருட்டு, வைத்தியசாலைக்கு 2003ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர்களினால் ஒருதொகுதி அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மேற்படி பொருட்களை வைத்தியசாலைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை (01) இடம்பெற்றது. பதில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.ஐ.எம்.றகீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், டொக்டர் எஸ்.எச்.எம்.யசீர் பொருட்களைக் கையளித்தார்.

இதன்போது சிறுபிள்ளை வைத்திய நிபுணர் கே.கமலதீபன், மருந்தாளர் எம்.ஏ.ஏ.றபாயுல், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் எம்.ஏ.நயீம், சத்திர சிகிச்சை கூட பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் எம்.எல்.இர்பானா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கல்முனை மாநகர சபை வரிப்பண மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## ஹரீஸ் எம்.பி. உறுதி

(மாளிகைக்காடு செய்தியாளர்)



கல்முனை மாநகர சபை மக்கள் வரிப் பணத்தை மோசடி செய்தவர்களுக்கு எதிராக தயவு தாட்சணையின்றி கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தான் பேசியுள்ளதாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை மாநகர சபை மக்கள் வரிப்பண அறவீட்டில் இரு உத்தியோகத்தர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ள நிலையில், இவ்விருவரும் பதவியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக விரிவான விசாரணையை மேற்கொண்டு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கல்முனை மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளருடன் தொடராக தான் ஆலோசனை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், இது தொடர்பில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரை தொடர்பு கொண்டு இம்மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க தான் பேசியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் வரிப்பணத்தில் இடம்பெற்ற இந்த மோசடி நடவடிக்கை, கல்முனை மாநகர மக்கள் மத்தியில் கவலையையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான களவு, மோசடிகளை மூடி மறைக்க தான் உள்ளிட்ட ஏனைய அரசியல் தலைவர்கள் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை எனத் தெரிவித்த அவர், இம்மோசடி மூலம் கல்முனை மக்களின் நம்பிக்கையை சிதைத்தவர்களுக்கு எதிராக தயவு தாட்சணையின்றி கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தான் பொதுமக்களிடம் உறுதிப்பட தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# துவிச்சக்கர வண்டி வழங்கிவைப்பு



(பெரியநீலாவணை செய்தியாளர்)

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பிரதேசங்களைச் சேர்ந்த வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் கல்விக்கான கனடா அமைப்பு ஏற்பாடு செய்த வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசமாக துவிச்சக்கர வண்டிகளை வழங்கும் நிகழ்வு பாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயத்தில் புதன்கிழமை (01) மாலை நடைபெற்றது.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பின் ஒருங்கிணைப்போடு நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்விக்கான கனடா அமைப்பின் அமைப்பாளர் வி.சரண்தாஸ், பிரதான செயற்பாட்டாளரும் யாழ் பல்கலைக்கழக வைத்தியத்துறை விரிவுரையாளருமான டொக்டர் கே.காண்டீபன், பாடசாலை அதிபர் ரி.வில்வராஜா, முன்னாள் அதிபர் எஸ்.புனிதன், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கிராம சேவை நிர்வாக அதிகாரி எஸ்.அமலநாதன், றைடர்ஸ் கப் சைக்கிளோட்ட கழக வீரர்கள் உட்பட அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com



அம்பாறை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில் தமது பங்களிப்புகளை வழங்கிய கலைஞர்கள் சிலருக்கு சான்றிதழ்களும் காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்குவதைக் காணலாம். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)

# திருகோணமலையில் சிறுபோக வேளாண்மை அறுவடை ஆரம்பம்

(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுபோக வேளாண்மை அறுவடை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, மூதூர், வான் எல மற்றும் முள்ளிப்பொத்தானை போன்ற இடங்களில் இவ்வறுவடை நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில், கந்தளாய் குளத்தின் நீரைப் பயன்படுத்தி 22ஆயிரம் ஏக்கர் வேளாண்மை செய்கைபண்ணப்பட்டு அறுவடை செய்யப்பட்டு வருகின்றது. தற்போது விவசாயிகளுக்கு விளைச்சல் குறைந்துள்ளதாகவும் கந்தளாய் கண்டத்தில் விவசாயம் செய்துள்ள விவசாயிகள் மூன்று ஏக்கருக்கு 100 - 150 மூடைகள் விளையும் வயல் நிலங்கள் இம்முறை 50 - 65 மூடைகளே நெல் விளைந்துள்ளதாகவும் அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும், எங்களது நகைகளை அடமானம் வைத்தே இவ்விவசாயத்தை ஆரம்பித்தோம். சரியான நேரத்துக்கு பசளை கூட கிடைக்கவில்லை. அதைத் தொடர்ந்து கடந்த மாதம் நெற்கதிர்கள் மஞ்சள் நோய் தாக்கத்துக்கும் உள்ளாகியது. இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றோம். எனவே அரசு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து நஷ்டஈடு வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



ஜனாதிபதி ரணில் மாத்தயாவ கொலை செய்ய சதியாம் எண்டு குற்றப்புலனாய்வு விசாரணைய ஆரம்பித்துள்ளதாக ஒரு செய்தி பார்த்தன்! அந்த மனிசன போக்கனம் கெட்ட ஆருடா இப்படி சதி செய்தவங்க. நடந்த இடத்தயும் புல்லு சாகாத குள்ள நரியப்போல சோக்கான தலைவர் எமக்கு கிடையாது! அவரு நூறுவருசம் வாழவேண்டும் எண்டு குருந்தூர் மலயில புதுசா கட்டிற பன்சலை புத்தர் பகவானை வேண்டோனும்! என்ன நான் சொன்னது சரி எலுவா.?

# அட்டாளைச்சேனையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 1010 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி, பொலிஸ் பரிசோதகர்களான வசந்த குமார, பகிதரன் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்குச் சென்று நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன் அவரிடமிருந்த 1010 மில்லி கிராம் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை (02) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



துறைநீலாவணையிலிருந்து மட்டக்களப்பு செல்வதற்கு விசேட போக்குவரத்துச் சேவை வியாழக்கிழமை (02) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. பல வருட காலமாக துறைநீலாவணைக் கிராமத்தில் எதுவிதமான போக்குவரத்துச் சேவைகளும் இல்லாத நிலையில், பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர். இதனை நிவர்த்திசெய்யும் வகையில் களுவாஞ்சிக்குடி போக்குவரத்து சாலையின் புதிய முகாமையாளரின் வழிகாட்டலின் கீழ் குறித்த போக்குவரத்துச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மக்களின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான செயற்பாடுகளுக்கு பொது அமைப்புகள் நன்றி தெரிவிக்கின்றன. (துறைநீலாவணை செய்தியாளர்)

# பட்டிருப்பில் நிகழ்நிலை பரீட்சார்த்த செயற்றிட்டம்

(மட்டக்களப்பு செய்தியாளர்)

தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலத்தைக் கருத்திற்கொண்டு மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை இலகுபடுத்தும் நோக்குடன் பட்டிருப்பு கல்வி வலயத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள "பொருளாதார நெருக்கடி கால நிகழ் நிலை (online) மாற்று உபாய செயற்றிட்டத்தின்" பரீட்சார்த்த நிகழ்வு பட்டிருப்பு வலயக்கல்வி பணிப்பாளர் சி.சிறிதரன் தலைமையில் புதன்கிழமை(01) வலயக்கல்வி அலுவலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இப்பரீட்சார்த்த நிகழ்வில் பட்டிருப்பு கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் திவிதரன், ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தயாளசீலன், தகவல் தொழில்நுட்பத்திற்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் பார்த்தீபன், ஆசிரிய ஆலோசகர்கள், தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

நான்கு வருடகால நடுத்தர செயற்றிட்டமாக வாரத்தில் இரண்டு நாட்களில் குறித்த செயற்றிட்டத்தின் பிரகாரம் நிகழ்நிலை ஊடாக வலயத்தின் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கவுள்ளதாகவும் இத்திட்டத்தின் ஊடாக வலயத்திலுள்ள சுமார் 1600 மாணவர்கள் பயன்பெறவுள்ளதாகவும் வலயக்கல்விப் பணிப்பாளர் இதன்போது தெரிவித்தார்.

# நெற்செய்கை விஸ்தீரணத்தால் விவசாயிகள் நன்மையடைவர்

## மட்டக்களப்பு நீர்ப்பாசனப் பணிப்பாளர் ராஜகோபாலசிங்கம்

(புளியந்தீவு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வழக்கமாக சிறு போகத்திலும் பெரும் போகத்திலும் மொத்தமாக ஒரு இலட்சத்து 40 ஆயிரம் விஸ்தீரணம் கொண்ட நெற்காணிகள் நெற்செய்கைக்குள் உள்வாங்கப்படுகின்றன. இந்த வருடத்தில் அனைத்து குளங்களும் நீரால் நிரம்பி வழிவதால் நீர்ப்பாசனம் வழங்குவதில் இடர்பாடு தோன்ற இடமில்லை. ஆதலால், இதைவிட இன்னும் கூடுதலான நெற்காணிகள் நெற்செய்கைக்கு உள்வாங்கப்பட முடியும் - என மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.ராஜகோபால சிங்கம் தெரிவித்தார்.

குறிப்பாக, இந்த வருடத்தில் சிறுபோக நெற்செய்கை அதிகளவில் இடம்பெறுமென தமது திணைக்களம் நம்புகின்றது. நெற்செய்கையின் விஸ்தீரணம் அதிகரிக்கும்போது விவசாயிகள் இதனால் நன்மையடைவார்கள். அத்தோடு தேசிய நெல் உற்பத்தியும் கூடும்.

மட்டக்களப்பு மாவட்டம், நீர் மற்றும் நிலவளங்களுக்கு பெயர்போன மாவட்டமாகும். அத்தோடு, நெற்செய்கையால் தேசிய மட்டத்தில் பாரிய விளைச்சலை வழங்கும் மாவட்டமாகவும் திகழ்கின்றது. இங்கு 24 நீர்ப்பாசனக் குளங்கள் காணப்படுகின்றன. இவை யாவும் இவ்வருடம் பெய்த போதிய மழை வீழ்ச்சியினால் நிரம்பி வழிகின்றன- என்றார்.

# ஒந்தாச்சிமடம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(மட்டக்களப்பு செய்தியாளர்)

அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் மட்டக்களப்பு, ஒந்தாச்சிமடம் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் ஒந்தாச்சிமடம் விநாயகர் வித்தியாலயத்திலிருந்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கு உயர்தரக் கல்வியை தொடர்வதற்கான கற்றல் உபகரணம் உதவி வழங்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி ம.பிரபாகரன் தலைமையில் புதன்கிழமை (01) நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவுஸ்திரேலியாவிலிருந்து அவ்வமைப்பு சார்பாக வருகை தந்த கோ.ஜனபாலசுந்தரம், சம்மாந்துறை கல்வி வலய உதவிக் கல்வி பணிப்பாளர் வி.ரீ.சகாதேவ ராஜா மற்றும் பாடசாலை முன்னாள் அதிபர் சற்குணராஜா, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலையிலிருந்து உயர்தரம் கற்பதற்கு தகுதிபெற்ற 44 மாணவர்கள் உயர் தரம் கற்று வெளியேறும் வரைக்குமான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் வசதி குறைந்த 12 மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்குத் தேவையான மாதாந்த கட்டணத்தை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இம்மாணவர்களை கற்பித்த ஆசிரியர்களுக்கும் இதன்போது பரிசில்கள் வழங்கப்பட்டன.

# உலக செய்திகள்

## உக்ரைனில் உக்கிரமடையும் தாக்குதல்: ரஷ்யாவின் பிடிக்குள் பாக்முட் நகரம்



கிழக்கு உக்ரைன் நகரமான பாக்முட்டை (Bakhmut) சுற்றி நடைபெற்றுவரும் மோதல் தீவிரமடைந்துள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பாக்முட் நகரைக் கைப்பற்ற ரஷ்யப் படைகள் சுற்றிவளைத்து கடும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகவும், ரஷ்யாவின் தாக்குதல்களை எதிர்த்து உக்ரைன் வீரர்கள் கடுமையாகப் போராடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ''பாக்முட் நகரை விட்டுக்கொடுக்க மாட்டோம்'' என களத்திலுள்ள உக்ரைன் வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தான்

### இராணுவ வீரர்களுக்கும் உணவு வழங்க முடியாத அவலம்



பாகிஸ்தானில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவிவருவதால் எரிபொருள், உணவுப்பொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக அதிகரித்துள்ளது.

இதையடுத்து, அரசு ஊழியர்களின் சம்பளம் குறைப்பு, வெளிநாட்டுத் தூதரகங்களின் எண்ணிக்கை குறைப்பு, உளவு அமைப்புகளுக்கான நிதி குறைப்பு உள்ளிட்ட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இதனால் அரசு நிர்வாகமே ஸ்தம்பித்துள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் இராணுவ உணவகங்களிலும் உணவுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வீரர்களுக்கு ஒரு நாளைக்கு 2 வேளை உணவுகூட முறையாக வழங்க முடியவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.


இதுகுறித்து பீல்ட் கொமாண்டர்கள், குவார்ட்டர் மாஸ்டர் ஜெனரல் அலுவலகத்துக்கு கடிதம் எழுதியுள்ளனர். இதையடுத்து, உணவுப்பொருள் விநியோகம் மற்றும் சரக்கு போக்குவரத்துப் பிரச்சினை தொடர்பாக சரக்குப் போக்குவரத்து தலைமை அதிகாரி மற்றும் இராணுவ இயக்குநர் ஜெனரல் ஆகியோருடன் இராணுவ அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

## கிரீஸை உலுக்கிய ரயில் விபத்து: இதுவரை 46 பேர் உயிரிழப்பு

### ரயில்வே நிர்வாகத்தை கண்டித்து நாடு முழுவதும் மக்கள் போராட்டம்

#### மூன்று நாட்கள் தேசிய துக்க தினம் அனுஷ்டிப்பு






கிரீஸில் 2 ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 46ஆக அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், ரயில் விபத்து குறித்து சுதந்திரமான விசாரணைக்கு கிரீஸ் அரசு உத்தரவிட்டுள்ள நிலையில், மனித தவறு காரணமாக விபத்து நேரிட்டிருப்பது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும், விபத்து காரணமாக கிரீஸில் மூன்று நாட்கள் தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் விபத்து கிரீஸ் மக்களிடையே கோபத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் கிரீஸ் ரயில்வே நிர்வாகத்தைக் கண்டித்து மக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

ஏதென்ஸிலுள்ள ஹெலனிக் ரயில் நிலைய தலைமையகத்திற்கு வெளியே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறை வெடித்துள்ளது.

விபத்து குறித்து கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் தெரிவிக்கையில்,''துயரகரமான மனித தவறால் நடந்த விபத்து" என்று தெரிவித்துள்ளார்.

முதல்கட்டமாக லாரிசா ரயில் நிலையத்தில் பணிபுரிந்த 59 வயதான ஸ்டேஷன் மாஸ்டரின் அலட்சியத்தால் இந்த விபத்து ஏற்பட்டிருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனினும், தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ள அவர், ''தொழில்நுட்பக் கோளாறே விபத்துக்குக் காரணம்'' என்று தெரிவித்துள்ளார்.

350 பயணிகளுடன் ஏதென்சிலிருந்து தெசலோனிகிக்கு சென்ற ரயில், லாரிசா எனும் பகுதியில் சரக்கு ரயிலுடன் நேருக்கு மோதி விபத்துக்குள்ளானதில் பயணிகள் ரயிலின் முதல் 4 பெட்டிகள் தடம்புரண்டன. அதில் 2 பெட்டிகள் முழுவதும் உருக்குலைந்தன.

இக் கோர விபத்தில் 46 பேர் உயிரிழந்துள்ளதுடன், 72 பேர் காயமடைந்த நிலையில், 6 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தில் உயிரிழந்தோரில் பலர் மாணவர்களாவர்.

விடுமுறை முடிந்து ரயிலில் திரும்பிக்கொண்டிருந்த போது அவர்கள் உயிரிழந்துள்ளனர். மனித தவறு காரணமாக விபத்து நேரிட்டிருப்பது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## தாய்வானை சீண்டும் சீனா


தாய்வானை அச்சுறுத்துவதற்காக 25 போர் விமானங்கள் மற்றும் 3 போர்க்கப்பல் களை சீனா அனுப்பியுள்ளதாக தாய்வானின் பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவித் துள்ளது.

தாய்வான் அதிகாரப்பூர்வமான தனி நாடாக செயற்பட்டு வந்தாலும் கூட சீனா வின் செயல்கள் தாய்வானை சொந்தம் கொண்டாடும் நோக்கத்திலேயே உள்ளது. அமெரிக்காவுடன் தாய்வான் நெருக்கமாக இருப்பது சீனாவை கோபத்துக்குள்ளாக் கியுள்ளது. இந்நிலையில், தாய்வானை அச்சுறுத்தும் வகையில் 25 போர் விமானங்கள் மற்றும் 3 போர்க்கப்பல்களை சீனா தாய் வானை நோக்கி அனுப்பியுள்ளது.

இது குறித்து தாய்வான் பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவிக்கையில்,

''சீனாவின் 19 போர் விமானங்கள் தாய்வானின் வான்வெளியில் நுழைந்தன. இதேபோல் சீனாவின் போர்க் கப்பல்களும் தாய்வான் நீரிணையில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தாய்வான் போர் விமானங்கள், கப்பல்கள் மற்றும் கடலோர ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் மூலமாக நெருக்கமாக கண்காணித்து பதிலடி கொடுத்து வருகின்றது" - என்றார்.

## ட்விட்டருக்கு போட்டியாக களமிறங்கும் ப்ளூஸ்கை



ட்விட்டரின் இணை நிறுவுனரும், முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியுமான ஜொக் டோர்சி, ட்விட்டருக்கு பதிலாக ப்ளூஸ்கை செயலியை அறிமுகப்படுத்தியுள்ளார்.

ட்விட்டர் நிறுவனத்தை எலான் மஸ்க் கைப்பற்றியபோது தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்த ஜாக் டோர்சி தனது பதவியை இராஜினாமா செய்தார். இந்நிலையில், ட்விட்டருக்கு போட்டியாக புதிதாக ப்ளூஸ்கை என்ற சமூக வலைத்தள செயலியை அவர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

அப்பிள் இயங்குதளத்தில் சோதனை முயற்சியாக வெளியிடப்பட்டுள்ள இந்த செயலியானது விரைவில் எண்ட்ரொய்ட் இயங்குதளத்திலும் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## இலங்கை உதைபந்து சம்மேளனத்திற்கு தொடரும் சோகம்

### நால்வர் அடுத்தடுத்து இராஜினாமா

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் தற்போதைய நிர்வாக சபையிலிருந்து 4 பேர் இராஜினாமா செய்துள்ளனர். முன்னதாக சம்மேளனத்தின் செயலாளர் இந்திக்க தேனுவர தனது இராஜினாமா கடிதத்தை அதன் தலைவர் ரங்காவிற்கு அனுப்பினார். அதனைத் தொடர்ந்து உப தலைவர்களான சி.தீபிகா குமாரி மற்றும் சமன் தில்ஹான் நாகஹவத்த ஆகியோரும் தமது இராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர்.

மேலும், கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பொருளாளர் டி.சுதாகரும் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள் ளார்.

கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்றுச் சபையின் பெரும்பான்மையானவர்கள் இராஜினாமா செய்ததன் காரணமாக சம்மேளனத்தின் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

நிர்வாக சபை உறுப்பினர்களின் பதவி விலகல் காரணமாக கோரம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இதனால் செயற்பாடுகளைப் பேண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உதைபந்து சம்மேளனத் தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் எண் ணிக்கை 11 ஆக இருந்தாலும், ஜனவரி 14 அன்று 8 பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப் பட்டனர். குறைந்தபட்ச கோரத்தைப் பராமரிக்க ஆறு நிர்வாக உறுப்பினர்கள் தேவை, மேலும் 4 உறுப்பினர்கள் இராஜினாமா செய்ததால், இப்போது நான்கு பேர் மட்டுமே உள்ளனர். சர்வதேச உதைபந்து சம்மேளனம் ஜனவரி 21 முதல் இலங்கைக்கு சர்வதேச போட்டிகளில் விளையாட தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையை எதிர்த்தாடும் நியூசிலாந்து டெஸ்ட் குழாம் வெளியானது





இலங்கை கிரிக்கெட் அணியானது நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், அங்கு நியூசிலாந்து கிரிக்கெட் அணியுடன் மிக முக்கிய டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் ஒருநாள், இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் ஆடவுள்ளது.

இந்நிலையில், முதலில் நடைபெறவுள்ள இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்து அணியின் 13 பேர் கொண்ட டெஸ்ட் குழாம் நேற்று வெளியானது. அதன்படி டெஸ்ட் அணியின் தலைவராக வேகப்பந்துவீச்சாளர் டிம் சவுதி செயற்படவுள்ளார்.

இலங்கையின் சுற்றுப்பயணம் மார்ச் 09ஆம் திகதி ஆரம்பமாகி 2023 ஏப்ரல் 08ஆம் திகதி நிறைவடையவுள்ளது. நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் இலங்கை அணி, தலா 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் விளையாடவுள்ளது. குறித்த தொடர் இலங்கை உள்ளூர் தொலைக்காட்சியான சுப்ரீம் அலைவரிசையில் ஒளிபரப்பாகும்.

## திருடப்பட்ட ஒலிம்பிக் பதக்கங்கள் நகலெடுக்கப்பட்டன

(ரமணி)




1928 ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் ஒலிம்பிக்கில் கனேடிய ஓட்டப்பந்தய வீரர் பெர்சி வில்லியம்ஸ் வென்ற இரண்டு தங்கப் பதக்கங்கள், 1980ஆம் ஆண்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தபோது திருடப்பட்டதிலிருந்து மீட்கப்படவில்லை, அவை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி (IOC) மூலம் நகலெடுக்கப்பட்டு மாற்றப்பட்டன. இந்த முயற்சி வில்லியம்ஸின் குடும்பத்தின் கோரிக்கையைத் தொடர்ந்து, கனேடிய ஒலிம்பிக் கமிட்டி (COC) மற்றும் IOC ஆகியவை அசல் குறிப்புகளைப் பயன்படுத்தி இணைந்து 100 மற்றும் 200 மீற்றர் பதக்கங்களை மீண்டும் உருவாக்குவதற்குத் தூண்டியது. புதிதாகத் தயாரிக்கப்பட்ட பதக்கங்களை BC ஸ்போர்ட்ஸ் ஹால் ஆஃப் ஃபேமுக்கு அவரது குடும்பத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

ஒலிம்பிக் 100 மீ. சாதனையை 10.6 விநாடிகளில் சமன் செய்தார். அவர் தங்கம் வென்றபோது ஒலிம்பிக் 100 மீ. சாதனையை இரண்டு முறை சமன் செய்தார். 1930 இல், பேர்லின் 1936 ஒலிம்பிக்கில் ஜெஸ்ஸி ஓவன்ஸ் 10.2 ஓடி அதை முறியடிக்கும் வரை 10.3 விநாடிகளில் 100 மீற்றர் உலக சாதனை படைத்தார். 1972ஆம் ஆண்டில், கனேடியன் பிரஸ் கருத்துக்கணிப்பு வில்லியம்ஸ் கனடாவின் எல்லா நேரத்திலும் சிறந்த ஒலிம்பிக் விளையாட்டு வீரராக அறிவிக்கப்பட்டார், மேலும் 1979ஆம் ஆண்டில் அவர் ஆர்டர் ஆஃப் கனடாவின் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

ஒரு வருடம் கழித்து அவர் தனது ஒலிம்பிக் பதக்கங்களை BC ஸ்போர்ட்ஸ் ஹால் ஆஃப் ஃபேமுக்கு நன்கொடையாக வழங்கினார், அங்கிருந்து இரண்டு வாரங்களுக்குப் பிறகு அவை திருடப்பட்டன. வில்லியம்ஸ் தனது பிற்காலங்களில் மூட்டுவலியால் கடுமையாக பாதிக்கப்பட்டார், மேலும் 1982இல் தனது ஒலிம்பிக் வெற்றிகளைக் குறிக்கப்பெற்ற துப்பாக்கியால் தற்கொலை செய்துகொண்டார்.



டி.சி. போய்ஸ் நடத்திய மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி கொட்டகலை டெரிக்கிளேயார் பொது மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக் கிரிக்கெட் போட்டியில் 64 அணிகள் கலந்துகொண்டன. முதலாம் இடத்தை உதிரம் அணியினரும், இரண்டாம் இடத்தை டி.சி. போய்ஸ் அணியினரும் பெற்றுக்கொண்டனர். இவ்விளையாட்டுப் போட்டிக்கு அனுசரணையாளராக கெட்வின் ஆக்ரா நிறுவனம், இளைஞர்கள், பொதுமக்கள் அனைவரும் பங்களிப்பு செய்தனர்.

(சுரேஷ் கண்ணா)

## ஸ்கந்தா - மகாஜனா கல்லூரிகள் மோதும் வீரர்களின் போர் இன்று ஆரம்பம்




வீரர்களின் போர் என அழைக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணிகள் இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்று, நாளை என இரண்டு தினங்கள் நடைபெறும் போட்டியானது இரு கல்லூரிகளின் பழைய மாணவர்களின் அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் தொடர்பாக பங்கேற்கும் அணிகளின் அறிமுக நிகழ்வும் ஊடக சந்திப்பும் கடந்த செவ்வாய்க்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது கல்லூரி அதிபர்களாலும் இரண்டு அணிகளின் தலைவர்களாலும் வெற்றிக் கிண்ணம் அறிமுகப்படுத்தப்பட் டது.

குறித்த நிகழ்வில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் எம்.செல்வஸ்தன், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபர் எம்.மணிசேகரன், அணித் தலைவர்கள், பயிற்றுவிப்பாளர்கள் என்போர் கலந்துகொண்டனர். 21ஆவது வருடமாக நடைபெறும் குறித்த போட்டி 11 தடவைகள் சமநிலையில் முடிந்ததுடன், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 5 தடவைகளும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 4 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன.

இம்முறை சசிகுமார் கஜித் தலைமையில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் ஜெயகாந்தன் கௌரி சங்கர் தலைமையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் களமிறங்கவுள்ளன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7